விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 31 திங்கட்கிழமை (13.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 177

## இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகளில் முன்னாள் போராளிகள் சாட்சியமளிக்க விருப்பம்

### தமது அடையாளம் வெளிப்படுத்தப்படாத பட்சத்தில்

(கேப்டவுன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது சாட்சியம் அளிக்கத் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

ஜஸ்மின் சூகா தலைமையிலான தென்னாபிரிக்க மனிதவுரிமைகளுக்கான நிறுவனத்துடன் இணைந்து இலங்கையில்சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் மேற்கொண்ட ஆய்வின் போது ஐரோப்பாவில் புலம்பெயர்ந்து வாழும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள பலர் இவ்வாறு விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

நான்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள 75 தமிழர்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் சாட்சியம் அளித்தவர்களில் 54 பேர் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களாவர்.

இவர்களில் 82 சதவீதமானோர்

24 ஆம் பக்கம் பார்க்க....

## காணொளிகள் மூலம் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சீசீரீவி காணொளிகளை அடிப்படையாக கொண்டு, வீதி விதிமுறைகளை மீறுவோர் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வதற்கான சட்டங்களை மேலும் கடுமையாக்குவதற்கு வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ளது.

சீசீரீவி காணொளிகளை அடிப்படையாக கொண்டு போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் பொலிஸார் வழக்கு

24 ஆம் பக்கம் பார்க்க....

# இன்று ஆரம்பமாகிறது ஜெனிவா கூட்டத் தொடர்

## இலங்கை குறித்த பிரதான வாய்மூல அறிக்கையை ஐ.நா ஆணையாளர் ஹுசைன் சமர்ப்பிக்கவுள்ளார்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 32ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி வரை நடை பெறவுள்ள இக்கூட்டத் தொடரில் இலங்கை நிலைவரம் தொடர்பான பிரதான வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளமையின் காரணமாக இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவம் மிக்க கூட்டத் தொடராக இது காணப்படுகின்றது.

24 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச யோகா தின நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் யாழில்

### யாழ்.இந்திய துணைத்தூதுவர் தகவல்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ள சர்வதேச யோகா தினத்தில் வட மாகாணம் முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என தெரிவித்த யாழ் இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன்

24 ஆம் பக்கம் பார்க்க....

## உயிருக்கு போராடிய 3 அகதிகள் மீட்பு

(கொழும்பு)

இந்தியாவின் நாகை மாவட்டம் கோடியக்கரை கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை அகதிகள் மூன்று பேர் நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த மூவர் பயணித்த படகு பழுது காரணமாக நடுக்கடலில் நின்றுள்ளது. இதனையடுத்து, நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை அக்கரைப்பேட்டை

24 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா திடலில் மீண்டும் அலையென திரள்வோம்

### பழ.நெடுமாறன் அழைப்பு

(சென்னை)



ஈழத் தமிழர்களுக்கான பரிகார நீதியை வேண்டி ஐ.நா திடலில் மீண்டும் அலையென அணி திரள்வோம் என தமிழின உணர்வாளரும் தமிழர் தேசிய இயக்கத் தலை

24 ஆம் பக்கம் பார்க்க....

## தான்தோன்றித்தனமான செயற்பாடே கட்சிப் பிரிவினைகள் ஏற்படக் காரணம்


### முதலமைச்சர் விக்னேஸ்வரன் கருத்து

(யாழ்ப்பாணம்)

நாங்கள் கூடிக் கலந்து தீர்மானங்களை எடுக்காமல் தான்தோன்றித்தனமாகத் தீர்மானங்களை எடுப்பதால் தான் சமூகம் மற்றும் கட்சிப் பிரிவினைகள் ஏற்படுகின்றது என தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

நாம் கூறுபவற்றை மற்றவர்கள் ஏற்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். இன்னொரு வரும் அவ்வாறே தீர்மானித்து எதிர்பார்க்கின்றார். இதுவே முரண்பாடுகளை

24 ஆம் பக்கம் பார்க்க....



## அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு! 50பேர் பலி; 53பேர் படுகாயம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இரவு விடுதி ஒன்றில் மர்ம நபர் ஒருவர் நேற்று திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினார். டவுன டவுன் ஆர்லந்தோ நகரில் உள்ள பல்ஸ் என்ற இரவு கேளிக்கை விடுதியில் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

அதிகாலை நேரத்தில் இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த போது, அங்கு வந்த மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியால் சுடத்தொடங்கினார். துப்பாக்கி சத்தம் கேட்டதும் உள்ளே இருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடினர்.

உடனடியாக அங்கு வந்த பொலிஸார், பதில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் பலர காயம் அடைந்ததாக முதலில் தெரி

24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சாலாவ பகுதி மக்களுடன் சந்திப்பு



கொஸ்கம-சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தினால் வீடுகள், கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் கண்டறிவதற்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன நேற்று குறித்த பிரதேசத்திற்கு சென்று மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது கட்டிடங்களை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கும், மக்களுக்கு தேவையான நிவாரணங்களை துரிதமாக வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய படையினர் தமது முழு அர்ப்பணிப்புடனும் சிதைவடைந்த கட்டிடங்கள் மற்றும் வீடுகளை மீளமைப்பு செய்வதற்கான பணிகளை தற்சமயம் முன்னெடுத்துள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-12)

# சாலாவ இராணுவ முகாம்வெடிப்பு; 3 வாரங்களுக்கு நடமாடும் சேவை

(கொழும்பு)

சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிறப்பு, இறப்பு, கல்விச் சான்றிதழ் உள்ளிட்டவைகளை பெற்றுக்கொடுக்க நடமாடும் சேவையொன்று மூன்று வாரங்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

சீதவாக்க பிரதேச செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைக் கூறினார். மூடப்பட்டிருந்த சகல பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளதுடன் தம்மிடம் இருக்கும் ஆடைகளை அணிந்து கொண்டு அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு வருமாறு கேட்டுக்கொள்வதாக அமைச்சர் கூறினார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களை இன்று திங்கட்கிழமை காலை, இராணுவ வீரர்கள் பகிர்ந்தளிப்பார்கள் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். கொஸ்கம சாலாவ இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடிப்பில் சேதமடைந்த வீட்டு உரிமையாளர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயை இன்றைய தினம் முடிந்தளவுக்கு பெற்றுக் கொடுக்க வாய்ப்பு உள்ளதாக சீதாவாக்க பிரதேச செயலாளர் எம்.எம்.எஸ்.கே. பண்டார தெரிவித்தார். (செ-12)

# கணக்காய்வு ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

தேசிய கணக்காய்வுச் சட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுத்து, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டமொன்று இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

கணக்காய்வு திணைக்களத்தின் ஒன்றிணைந்த சங்கங்களின் கூட்டமைப்பு இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட போவதாக தெரிவித்துள்ளது.

தேசிய கணக்காய்வுச் சட்டம் இயற்றப்பட்டு 15 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் இதுவரை நாடாளுமன்றத்தில் முன்வைத்து நடைமுறைப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (செ-12)

# கால்வாயில் வீழ்ந்து முச்சக்கரவண்டி விபத்து

(யாழ்ப்பாணம்)

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி ஒன்று கால்வாயில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் ஆரிய குளச்சந்திக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, முச்சக்கர வண்டி ஒன்றை இயந்திர கோளாறு காரணமாக சாரதி வேம்படிச் சந்தியில் இருந்து ஆரியகுளச் சந்தியை நோக்கி உருட்டிச் கொண்டு வந்துள்ளார்.

அப்பகுதியிலுள்ள புகையிரத கடவைப் பகுதியில் முச்சக்கரவண்டியின் ஆாமுடுகி திடீரென இயங்கியமையால் சாரதியின் கட்டுப்பாடில்லாமல் ஆரியகுளச் சந்திக்கு அண்மையில உள்ள கால்வாய்ப் பகுதிக்குள் வீழ்ந்துள்ளது. எனினும் இவ் வீபத்தில் எவ்விதமான உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை. (செ-12)

# க.பொ.த (உ/த) பரீட்சை ஓகஸ்ட்-02 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட்-21

(கொழும்பு)

இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை என்பன ஏற்கெனவே திட்டமிட்டுள்ளவாறு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என். ஜே.புஷ்பகுமார மேற்கொண்டு வருகின்றார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் 02 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சை மண்டப ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கான கூட்டம் கொழும்பு, இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில் நாடளாவிய ரீதியிலுள்ள கல்விப் பணிப்பாளர்கள், பரீட்சைகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர்கள் வழங்கிய தரவுகளின் பிரகாரம் கோட்டத்திற்கு அல்லது வலயத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களின் உதவியுடன் பரீட்சை இணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் கல்விப் பணிப்பாளர்கள் மண்டப ஒதுக்கீட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (செ-12)


சேவை முகவர்

காணிகள், வீடு விற்பனைக்கு

கோயில் வீதி, பலாலி வீதி உரும்பிராய், மணல்தறை லேன், மின்சார வீதி, Y.M.C லேன் ஆகிய இடங்களில்.

யாழ்.நல்லூர், விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

(3865)

சுந்தரம் :- 077 481 9801



31 ஆம் நாள் நினைவஞ்சலிகள்

மலர்வு 10 02 1962

உதிர்வு 14 05 2016



அமரர் நாகேந்திரம் விக்கினேஸ்வரன் (விக்கி)

கூப்பிட்ட குரல் கேட்டு
ஓடோடி வந்து
உதவிகள் புரிந்து எமக்கு
உறுதுணையாய் நின்றவரே
காலனுமைக் கொண்டு செல்ல
மணியர்பதி முருகன் தாள்
சரணடைந்தீரே
உம் ஆத்மா சாந்திக்காய்
இறைவனைத்
தொழுகின்றோம்

உம் பிரிவால் துயருறும்
தம்பி குடும்பத்தினர்

(C-4865)



கண்ணீர் அஞ்சலி

செல்வி தம்பிராசா சந்திரலதா

மண்ணில் மொட்டாக :- 12.09.1979
விண்ணில் மலராக :- 12.06.2016



தமிழின் ஆழம் கண்ட
புகழ் பூத்த ஆசிரியை நீர்
கலா சாலையில் தமிழ் நெறி கற்க
வந்து நின்றீர் இந்த நெறி
உந்தனுக்கு தேவையா?
எண்ணி நின்றோம்
செப்பிடும் தமிழ் வித்தகி
உந்தனுக்கு கொடிய
புற்று நோய் உந்தன் உயிரை
வாட்டி காவு கொண்டது வோ...
எம் மனதை வாட்டியே ...
வதைக்குதம்மா உன் பிரிவு
மீளாத துயரோடு எம்
இதயம் கனக்கின்ற கண்ணீர்
காணிக்கையை ....
உந்தனது பாதக் கமலத்தில்
சமர்ப்பணமாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!




ஆசிரிய மாணவ நண்பர்கள்
2014 - 2015 கல்வியாண்டு
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

(C-4874)

## போர்க்குற்ற பொறுப்புக்கூறல் விசாரணைக்கு

# வெளிநாட்டு நீதிபதிகள் எமக்கு தேவையில்லை

## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்



(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறும் விசாரணைகளில், வெளிநாட்டு நீதிபதிகள் எமக்குத் தேவையில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வெளிநாட்டு நீதிபதிகள் எமக்குத் தேவையி ல்லை. எமது நாட்டில் இருக்கும் எந்தப் பிரச்சினைகளையும், வெளிநாட்டுத் தலையீடுகள் இல்லாமல் நாமே தீர்த்துக் கொள்ள முடியும்.

தேவைப்பட்டால் வெளிநாட்டு தொழில்நுட்ப உதவிகளை கோர முடியும். ஆனால், கடப்பாடுகள், நிபந்தனைகளின்றியே அந்த உதவி பெறப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## தீக்காயங்களுக்குள்ளான இளம்தாய் பரிதாப மரணம்

யாழ்.சுன்னாகம் பகுதியில் தீக்காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த இளம் தாய் ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியைச் சேர்ந்த பிரபாகரன்கனிஸ்டா (வயது-23) என்ற 4 வயது பிள்ளை ஒன்றின் தாயாரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இவர் கடந்த 5 ஆம் திகதி காலை வீட்டை சுத்தம் செய்து குப்பைகளை மண்ணெண்ணெய் ஊற்றி கொழுத்தி விட்டு மண்ணெண்ணெய் போத்தலை மூடாமல் அருகில் இருந்த தொட்டியில் வைத்துள்ளார். அந்த சமயம் கடும் காற்று வீசிய போது போத்தலில் இருந்த மண்ணெண்ணெய் தவறுதலாக அவர் மேல் பட்டு உடல் முழுவதும் தீப்பற்றியுள்ளது.

உடனடியாக அயலாரின் உதவியுடன் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## துருக்கி வெளிவிவகார அமைச்சர் ஒருவர் முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம்



இலங்கைக்கான விஜயத்தினை துருக்கி வெளிவிவகார அமைச்சர் ஒருவர் முதல் தடவையாக மேற்கொள்ள உள்ளதாக இலங்கையில் அமைந்துள்ள துருக்கி நாட்டு தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இரண்டு நாட்கள் கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தினை துருக்கி நாட்டின் வெளி விவகார அமைச்சர் மெவுலட் கெவுசொக்லு நாளை 14 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளார்.

குறித்த விஜயத்தின் போது துருக்கி நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் போன்றோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

### ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் புதிய உறுப்பினராக நீதவான்

பாரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயர் நீதிமன்ற நீதவான் பியசேன ரணசிங்கவிற்கு வழங்கியுள்ளார். (இ-5)

## 10 அமைச்சர்களுக்கு எதிராக ஊழல், மோசடிக் குற்றச்சாட்டு

பத்து அமைச்சர்களுக்கு எதிராக ஊழல்,மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுளளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் பதவி வகிக்கும் பத்து அமைச்சர்கள் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த பத்து அமைச்சர்கள் தொடர்பிலும் எதிர்வரும் நாட்களில் ஊழல் ஒழிப்பு செயலகத்தில் முறைப்பாடு செய்யப்படும் என அக்கட்சி தெரி வித்துள்ளது.

பல்லாயிரம் மில்லியன் ரூபா பணம் மோசடி செய்துள்ளதாகவும், அமைச்சு நிர்வாக நடவடிக்கைகளில் திறனின்மை, ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட உள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் பீட உறுப்பினர் நிரோசன் பிரேமரட்ன தெரிவித்துள்ளார். (இ-5)

## கேகாலையில் மேலும் 636 இடங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளது

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் மேலும் 636 இடங்கள் மண்சரிவு அபாயத்திற்குள்ளாகியுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குறித்த பகுதிகளை சேர்ந்த 2800 குடும்பங்களை சேர்ந்தவர்கள் இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் மண்சரிவு அபாய எச்சரிக்கை மற்றும் இடர்முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ்.பண்டார தெரிவித்தார்.

குறித்த பகுதிகளில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் , மக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறுவது கட்டாயமானதொன்று எனவும் ஆர்.எம். எஸ்.பண்டார தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அரநாயக்க, புலத்கோபிட்டிய, தரணியகல, யட்டியந்தோட்டை, வரகாபொல மற்றும் கேகாலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பல பகுதிகளில் மண்சரிவு அபாயம் நிலவுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மக்கள் தங்களின் இருப்பிடங்களைவிட்டு வெளியேறுவதில் அதிருப்தி தெரிவிப்பதாகவும் தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் எந்த நேரத்திலும் அனர்த்தங்கள் ஏற்படலாம் என தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் மண்சரிவு அபாய எச்சரிக்கை மற்றும் இடர்முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவதானத்துடன் செயற்படுவது கட்டாயமாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்ய கொரியா தீர்மானம்


இலங்கையின் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் கொரியா 5 மில்லியனை முதலீடு செய்வதற்கு தயாராக இருப்பதாக தெரிய வருகின்றது.

இந்த முதலீடுடன் மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் சேவைக்கு அதிகமாக தன்னார்வ பணியாளர்களை அழைத்துக் கொள்வதற்காக (A.V.S) என்ற திட்டத்தினை தொடர வெளிநாட்டு கூட்டு முயற்சியில் மீன்பிடி கூட்டுத்தாபனத்தை நடத்தி செல்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மைக்காலமாக இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனமானது நட்டத்தில் இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நட்டத்தினால் அங்குள்ள பணியாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவை வழங்க திறைசேரியின் நிதி பெறப்பட்டுள்ளதாகவும் இதேவேளை, நாட்டைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் நல்ல மீன்கள் பிடிக்கப்பட்டாலும் வருடாந்தம் 15 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மீன் மற்றும் மீன் சார்ந்த பொருட்களை இலங்கை இறக்குமதி செய்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

### மும்முனை ஒரு நாள் தொடர்
# வோர்னர் சதம்; ஆஸி வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் தொடரின் 4ஆவது லீக் போட்டியில் டேவிட் வோர்னர் சதமடித்து கைகொடுக்க, அவுஸ்திரேலிய அணி 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள அவுஸ்திரேலியா அங்கு தென்னாபிரிக்கா அணியுடன் இணைந்து முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்கின்றது.

செயின்ட் கிட்ஸ் நகரில் நேற்று நடந்த லீக் போட்டியில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெனற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**வோர்னர் அபாரம**

அவுஸ்திரேலிய அணிக்கு ஆரோன பின்ச் (13) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய டேவிட் வோர்னர் சதமடித்தார். மறுமுனையில் இவருக்கு ஒத்துழைப்பு தந்த உஸ்மான் கவாஜா அரைச் சதம் கடந்தார். இவர்கள் இருவரும் இணைந்து 2 ஆவது விக்கெட்டுக்கு 136 ஓட்டங்கள் சேர்த்தபோது வோர்னர் (109) ஆட்டமிழந்தார். பங்கிசோ பந்தில் கவாஜா (59) வெளியேறினார். அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் தன் பங்குக்கு அரைச் சதமடித்தார். ஜோர்ஜ் பெய்லி (11), மிட்சல் மார்ஷ் (10) நிலைக்க வில்லை. மத்யூ வேட் (24) ஓரளவு ஆறுதல் தந்தார்.

அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 288 ஓட்டங்கள் எடுத்தது.

ஸ்மித் (52), ஜேம்ஸ் போல்க்னர் (1) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் இம்ரான் தாகிர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**அம்லா ஆறுதல**

கடின வெற்றியிலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு குயின்டன் டி ஹொக (19) ஏமாற்றினார். பொறுபபாக ஆடிய ஹசிம் அம்லா (60), டு பிளசிஸ் (63) அரைச்சதம் கடந்தனர். அணித் தலைவர் டி வில்லியர்ஸ் (39), டுமினி (41) ஓரளவு நம்பிக்கை அளித்தனர்.

பெகார்டியன் (4), பார்னல் (3), அபோட் (1), பங்கிசோ (3), இம்ரான் தாகிர் (6) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்க அணி 47.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்கள் எடுத்து 36 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ரபாடா (3) ஆட்டமிழக்காமல் இருந்தார். அவுஸ்திரேலியா சார்பில் மிட்சல் ஸ்டார்க், ஹேசல்வுட், அடம் ஷாம்பா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் டேவிட் வோர்னர் தெரிவானார்.

இதன்மூலம் 2ஆவது வெற்றியை பதிவு செய்த அவுஸ்திரேலியா 9 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியது. அடுத்த 2 இடங்களில் முறையே தென்னாபிரிக்கா (5), மேற்கிந்தியத் தீவுகள் (4) அணிகள் உள்ளன. (க)

### கோபா அமெரிக்க கால்பந்து
# காலிறுதியில் அமெரிக்கா



கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் காலிறுதிக்கு அமெரிக்கா முன்னேறியது. நேற்று நடந்த லீக் போட்டியில் பராகுவே அணியை 1:0 எனற கோல் கணக்கில் வீழ்த்தியே அது காலிறுதிக்கு முன்னேறியது.

அமெரிக்காவில் 45ஆவது கோபா அமெரிக்க கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் 'ஏ' பிரிவு லீக் போட்டியில் அமெரிக்கா, பராகுவே அணிகள் மோதின.

போட்டியின் 27ஆவது நிமிடத்தில் ஜார்டசிடமிருந்து பெற்ற பந்தை, இடது காலால் உதைத்த டெம்ப்சே அப்படியே கோலாக மாற்றினார். இதற்கு எதிரணி பதிலடி தர மறுக்க, முதல் பாதியில் அமெரிக்கா 1:0 என முன்னிலை பெற்றது. போட்டியின் 47ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீரர் யேட்லின் தேவை இல்லாமல் முரட்டு ஆட்டத்தில் இறங்கி, மஞ்சள் அட்டையை பெற்றார். இதை அடுத்த நிமிடத்திலும் (48) தொடர, இரண்டாவது முறையாக 'மஞ்சள் அட்டை பெற்ற யேட்லின், சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால், 10 வீரர்களுடன் அமெரிக்க அணி விளையாடியது. கடைசிவரை போராடிய பராகுவே அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முடிவில், அமெரிக்கா 1:0 எனற கோல் கணகில் வெற்றி பெற்றது.

* ஏற்கெனவே ஒரு வெற்றி, ஒரு தோல்வி பெற்றிருந்த அமெரிக்கா, இந்த வெற்றியின் மூலம் 6 புள்ளியுடன் காலிறுதிக்கு முன்னேறியது.

* இதே பிரிவு மற்றொரு லீக் போட்டியில் கொஸ்டா ரிகா 3:2 எனற கோல்கள் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தியது.

### இந்தியா - சிம்பாப்வே 2ஆவது மோதல் இன்று



இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி இன்று நடக்கிறது. இதில் இந்திய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.


சிம்பாப்வே சென்றுள்ள இந்திய அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இந்தியா வெனறுள்ள நிலையில் 2ஆவது ஒரு நாள் போட்டி இன்று ஹராரேயில் நடக்கிறது.

கடந்த போட்டியில் இந்தியா சார்பில் லோகேஷ் ராகுல், அம்பதி ராயுடு சிறப்பாக செயல்பட்டனர். அறிமுக போட்டியில் சதம் கடந்து சாதனை படைத்த ராகுல், இன்றும் அசத்தலாம். கருண் நாயர் சுதாகரிப்பது அவசியம். இளம் அணியை அனுபவ தோனி அருமையாக வழிநடத்துகிறார். மன்தீப் சிங், பைஜ் பைசல் உள்ளிட்டோருக்கும் வாய்ப்பு கிடைக்கலாம்.

**பும்ரா மிரட்டல:** வேகப்பந்து வீச்சில் 'யோர்க்கர்' புகழ் பும்ரா ஜொலிக்கிறார். கடந்த போட்டியில் 4 விக்கெட் வீழ்த்தினார். இவருடன் பரிந்தர் ஸ்ரண், குல்கர்னியும் இணைவதால் 'வேகக்கூட்டணி' வலுவாக உள்ளது. 'சுழலில்' சாகல், அக்சர் படேல் அசத்தினால் இந்திய அணி தொடரை எளிதில் கைப்பற்றலாம்.

சிம்பாப்வேயை பொறுத்தவரை மசகட்சா, பயிற்சியாளர் வட்மோர் நீக்கம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. புதிய கப்டன் கிரீமர் பெரியளவில் சோபிக்கவில்லை. சிபாபவை மட்டுமே அணி அதிகமாக நம்புகிறது. 'வேகம்', 'சுழல்' என இரண்டிலும் ஏமாற்றம்தான். சிகும்பரா, அணித் தலைவர் கிரீமர் விக்கெட் வீழ்த்த திணறுகின்றனர். சட்டாரா மட்டும் ஆறுதல் தருகிறார்.

### அவுஸ்திரேலிய சுப்பர் சீரிஸ் பட்மிண்டன்
# சாய்னா நேவால் சம்பியன்




அவுஸ்திரேலிய ஓபன் பட்மிண்டன் தொடரில் அசத்திய இந்தியாவின் சாய்னா நேவால் கிண்ணம் வென்று அசத்தினார்

சிட்னியில் அவுஸ்திரேலிய ஓபன் பட்மிண்டன் தொடர் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் 'நம்பர்-8' வீராங்கனையான இந்தியாவின் சாய்னா, தரவரிசையில் 12ஆவது இடத்திலுள்ள சீனாவின் சன் யூவை சந்தித்தார். முதல் செட்டை 11:21 என சாய்னா இழந்தார். பின் சுதாரித்த இவர் அடுத்த செட்டை 21:14 என கைப்பற்றினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் ஆதிக்கத்தை தொடர்ந்த செய்னா 21:19 என வென்றார். ஒரு மணி நேரம் 11 நிமிடம் நீடித்த போட்டியின் முடிவில், சாய்னா 11:21, 21:14, 21:19 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றினார்.

**இரண்டாவது பட்டம**

இத்தொடரில் சாய்னா 2ஆவது முறையாக பட்டம் வென்றார். ஏற்கெனவே கடந்த 2014ல் கிண்ணத்தை கைப்பற்றி இருந்தார். தவிர இந்த சீசனில் முதல்முறையாக கிண்ணத்தை வென்றுள்ளார்.

**பரிசு மழை**

இந்திய வீராங்கனை சாய்னாவுக்கு வெற்றிக் கிண்ணத்துடன் ரூ. 38 லட்சம் பரிசாக வழங்கப்பட்டது.

* இந்திய பட்மின்டன் சங்கம் சார்பில் ரூ.10 லட்சம் தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**14 மாதங்களுக்குப்பின்**

சுப்பர் சீரிஸ் அந்தஸ்து பெற்ற ஒரு தொடரில் 14 மாதங்களுக்குப்பின் சாய்னா பட்டம் வென்றார். கடைசியாக 2015, மார்ச்சில் இந்திய ஓபனில் கிண்ணத்தை கைப்பற்றி னார்.

**உலக சம்பியனை வீழ்த்தினார்**

இத்தொடரில் அசத்திய சாய்னா, காலிறுதியில் தாய்லாந்தின் ரட்சனோக் (2013), அரையிறுதியில் சீனாவின் இகான் வாங் (2011) என இரு உலக சம்பியன்களை வீழ்த்தினார்.

# யூரோ கால்பந்து; ரசிகர்கள் வன்முறை

யூரோ கால்பந்து தொடரில் இங்கிலாந்து, ரஷ்ய ரசிகர்கள் இடையே பயங்கர மோதல் வெடித்தது. இந்த வன்முறையில் பலர் காயம் அடைந்தனர். இங்கிலாந்து ரசிகர் ஒருவர் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரான்சில் நடக்கும் யூரோ கோப்பை கால்பந்து லீக் போட்டியில் இங்கிலாந்து, ரஷ்ய அணிகள் மோதின. இப்போட்டி தொடங்கும் முன்பே, மார்செல்லியில் இங்கிலாந்து, ரஷ்ய ரசிகர்கள் மோதலில் ஈடுபடடனர். பொலிசார் கண்ணீர் புகை குண்டுகள் வீசி கூட்டத்தை கலைத்தனர். பின் மார்செல்லி நகரின் ஸ்டேடு விலோடிரோம் மைதானத்தில் நடந்த போட்டி 'டிராவில்' முடிந் தது.

**ரஷ்யா தாக்குதல்:** கடைசி கட்டத்தில் ரஷ்ய அணி கோல் அடித்த உற்சாகத்தில் இருந்த ரசிகர்கள், இங்கிலாந்து ரசிகர்கள் மீது தாக்குதல் நடத்த தொடங்கினர். இங்கிலாந்து கொடி அச்சிட்ட 'ரீ செர்ட்' அணிந்திருந்தவர்களை உதைப்பது, அடிப்பது உள்ளிட்ட வன்முறை செயல்களில் இறங்கினர். மோதல் முற்ற, உயிர் பயத்தில் சிலர் மைதான அரங்கிலிருந்த இரும்பிலான எல்லை தடுப்பில் ஏறி குதித்து தப்பி ஓடினர்.

**ஆபத்தான நிலை:** சில ரசிகர்கள் நாற்காலி, போத்தல்களை பொலிஸார் மீது தூக்கி எறிந்தனர். ஒரு சாலையில் இருந்த கடையை தீக்கிரையாக்கினர். தொடர் மோதலால் தலையில் பலத்த காயமடைந்த இங்கிலாந்து ரசிகர் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார். சுமார் 40 ரசிகர்கள் காயமடைந்துள்ளனர்.

**போதை காரணமா:** இது குறித்து இங்கிலாந்து ரசிகர் ஒருவர் கூறுகையில், "நூற்றுக்கணக்கான ரஷ்ய ரசிகர்கள் எங்கள் இடங்களுக்கு வந்தனர் பின், கையில் கிடைத்ததை தூக்கி எறிந்து மோதலில் ஈடுபட்டனர். எப்போதும் 'பீர்' குடித்துக் கொண்டே இருக்கின்றனர். இதுவும், பிரச்சினைக்கு முக்கிய காரணம்," என்றார்.

**விசாரணை:** மோதல் குறித்து, ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு (யு.இ.எப்.ஏ.,) வெளியிட்ட அறிக்கையில், 'ரஷ்யா-இங்கிலாந்து ரசிகர்கள் இடையே ஏற்பட்ட மோதலை கண்டிக்கிறோம். இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்," என, தெரிவித்துள்ளது யு.இ.எப்.ஏ., எச்சரிக் கை

கடந்த 2012ல் நடந்த யூரோ தொடரிலும் (போலந்து, உக்ரைன்), ரஷ்ய ரசிகர்கள் மோதலில் ஈடுபட்டனர். இதனால், ரஷ்ய கால்பந்து கூட்டமைப்புக்கு (ஆர்.எப்.யு.,) அபராதம் விதிக்கப்பட்டது. இம்முறையும் இது போல அபராதம் விதிக்கப் பட வாய்ப்புள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் 14ஆம் திகதி தெரியவரும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
Valampuriiadd@sltnet.lk
0212217603, 0213210815

# லசந்த கொலை தொடர்பிலான விசாரணைகளுக்கு இடையூறு

## இராணுவம் மீது புலனாய்வாளர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகை யின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பிலான விசாரணை களுக்கு. படைத்தரப்பில் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரி வினர் தெரிவித்துள்ளனர்.



லசந்த கொலை தொடர் பிலான முக்கிய தகவல்கள் பலவற்றை இன்னமும் படையினர் வழங்கத் தவறியுள்ளனர்.

சில முக்கியமான தகவல் களை வழங்குமாறு பல தடவை கள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரையில் இராணுவத்தினர் தகவல் களை வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தகவல்கள் வழங்கப்படாத காரணத்தினால் விசாரணைகள் ஸ்தம்பி தம் அடைந்துள்ளன.

லசந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் அவர்களை கைது செய்ய இராணுவத்தினரின் தகவல்கள் தேவைப்படுவ தாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தகவல்கள் வழங்கப்படாத காரணத்தினால் சந்தேக நபர்களை கைது செய்ய முடியவில்லை என பொலிஸ்தலை மையகத் தகவ ல் கள் தெரிவிக் கின்றன. (இ-5)

## முன்னாள் அமைச்சர் காலமானார்



முன்னாள் பொது நிர்வாகத்துறை மற்றும் நெசவுக் கைத்தொழில் அமைச்சர் யூ.பி.விஜயகோன் கண்டி வைத்தியசாலையில் நேற்றுக் காலமானார்.

விஜயகோன் வெலிமடையை சேர்ந்தவர். இவர் தன் பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்துள்ளார்.

உயிரிழக்கும் போது. 79 வயதுடைய இவர் ஒரு ஆசிரியராகவும் பின்னர் சிவில் சேவை அதிகாரியாகவும் இலங்கை பொது நிர்வாக சேவையில் பல்வேறு உயர் பதவிகளையும் வகித்திருந்தார். மேலும், ஜே.ஆர்.ஜெயவர்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அமைச்சராக விஜயகோன் கடமையாற்றியுள்ளார். விஜயகோன் 2003 ஆம் ஆண்டு ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் தனது அரசியல் பிரவேசத்தின் பின்னர், தம்பதெனிய தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளராகவும் அமைச்சராகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க அவரது பூதவுடல் பேராதனை பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திற்கு வழங்கப்படவுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். (இ-5)

# சு.க. தலைமையில் 2020ம் ஆண்டு ஆட்சி

## அமைச்சர் ஜோன் விருப்பம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையில் 2020 ஆம் ஆண்டின் ஆட்சியில் அமர வேண்டுமென்பதே எனது இலக்காகும். அதற்காக கட்சியை வெற்றிபெறும் கட்சியாக கட்டியெழுப்ப வேண்டியது அத்தியாவசியமாகும் என தொழில் மற்றும் தொழிலாளர் விரிவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பஷில் ராஜபக்ஷவிற்கு முன்னுரிமை வழங்கக் கூடாது. பஷில்தான் எமது தோல்விக்கு மூலக் காரணம் எனத் தெரிவித்துள்ள அமைச்சர்,

கோத்தபாய ராஜபக்ஷவிற்கு இரண்டாம் தர பதவி வழங்கக்கூறவில்லை. மாறாக இரண்டாம் தரவரிசையில் இடம்கொடுக்க வேண்டுமென்றே வலியுறுத்தினேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

1 Kg சுத்தம் செய்தது 500/= கூடுதல் கொள்வனவுக்கு 480/= மட்டும்.

U.S.A.பாம், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.
TP:077 868 9500, 077 949 3776
(4925)




✓ கெயார் (ஆண்) HAIR CUT (GENTS) = Rs 200/=
✓ சிறுவர் (ஆண்) CHILD CUT (GENTS) = Rs 150/=
✓ சவரம் = Rs 150/=
✓ தலை மசாஜ் HEAD MASSAGE = Rs 250/=

La Passion (லா பெஷன்)

HAIR BEAUTY - REFLEXOLOGY
176, K.K.S ROAD,
JAFFNA.
www.lapassionsalons.com
0767593357
GENTS - 8.00 AM To 9.00 PM
LADIES - 9.00 AM To 6.00 PM
(4871)

## இலவச யோகாசனப் பயிற்சி வகுப்பும் தியானமும்



சத்குரு ஜகி வாசுதேவின் கீழ் பயின்ற ஆசிரியர் வைத்திய கலாநிதி கௌரிபாலன் நடாத்துகின்றார்.

இடம்:- 18, சிவகுருநாதபீடம், குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

யோக ஆசனங்கள்:

காலம்:- 18.06.2016 பிற்பகல் 3-6 மணிவரை
19.06.2016 முற்பகல் 9-12 மணிவரை

சுகவீனம் உள்ளவர்கள் வைத்திய கலாநிதி கௌரிபாலன் யோகாசனம் அவர்களுக்கு எப்படி உதவி செய்யும் என்பதை கலந்துரையாட சந்தர்ப்பம் உண்டு

குறிப்பு:

1. இலேசான உணவை காலை 7 மணிக்கும் நண்பகல 12 மணிக்கும் முன் உண்ணவும்.
2. தளர்வான உடை பயிற்சிக்கு நன்று. பெண்களுக்கு மூடிய கழுத்துச் சட்டை அவசியம்.
3. அமர்ந்து இருக்க துவாய் அல்லது துணி தேவை.சிறு தலையணையும் உதவியாக இருக்கும்

தொடர்புகளுக்கு அல்லது பதிவு:- வைத்திய கலாநிதி கௌரிபாலன்
071 924 7919 rgbalan@gmail.com

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 1984 தொடங்கி 1989 வரை குழந்தை பெறும் மகளிர் மருத்துவ துறையில் கடமையாற்றியுள்ளேன். சில காலம் இங்கிலாந்தில் கடமையாற்றி திரும்பி வந்துள்ளேன். நான் கடந்த எட்டு வருடங்களாக ஈசா யோகா சற்குரு அவர்களின் மேற்பார்வையின் கீழ் பயின்று வருகின்றேன். மார்கழி மாதம் 2013 ஆம் ஆண்டு 21 கிழமைகள் வெள்ளையங்கிரி மலையடி வாரத்தில் உள்ள ஈசா ஆச்சிரமத்தில் அதி தீவிர பயிற்சியின் பின் தொன்மை வாய்ந்த ஹத்தா யோகா ஆசிரியராக பயின்றுள்ளேன்.


## இராசி பலன்

13.06.2016
(வைகாசி 31, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
நவமி முழுவதும்
உத்தரம் பிற்பகல் 5.03 மணிவரை
சுபநேரம்- 11.52-1.22 மணிவரை
இராகுகாலம்- 7.22- 8.52 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சூரி புத | சுக் |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி | | குரு ராகு |
| | சனி செவ் | | சந் |

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்-கும் நாள்.

**மேடம்** கலலப்பான செய்திகள் காலை நேரத்திலேயே வந்து சேரலாம், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறிக் கொள்வீர்கள்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வாகன யோகமுண்டு, தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம்.

**கடகம்** தொழிலில் நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும் நாள், கூட்டு முயற்சிகள் கைகூடும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** குடும்ப ஒற்றுமை கூடும், கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் ஆலோசனை கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழில் மேண்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** வீட்டுத்தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** அமைதி வந்து சேர ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் அபாயம்

## தெல்லிப்பழை வைத்திய அத்தியட்சகர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

மத்திய அரசால் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு வழங்கப்படும் ஆயிரம் மில்லியன் ரூபா வேலைத் திட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் வைத்தியசாலை தரப்பில் பூர்த்தியாகியுள்ள போதிலும், திட்டம் வைத்தியசாலைக்கு வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள தெல்லிப்பழை வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கே.இளங்கோ ஞானியார், உடனடியாக இந்த திட்டம் அமுல்படுத்தாவிட்டால் இந்த வருடத்திற்குள் வேலைத்திட்டத்தை பூர்த்தி செய்வது கடினம் எனவும், இதனால் நிதி திரும்பும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பறை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளை விட தெல்லிப் ழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு அதிகமான தேவைகள் உள்ளன.

குறிப்பாக இந்த வைத்தியசாலை புற்று நோயாளர்களை அதிகமாகவே கொண்டுள்ளது. மத்திய அரசினால் எமது வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆயிரம் மிலலியன் ரூபா நிதி போதாது என்றே கூற வேண்டும். பொதுவாக ஏனைய பெரிய வைத்தியசாலைகள் போதனா வைத்தியசாலை தரத்தில் உள்ளன. எமது வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை தரத்தில் உள்ளது.

இதனால் எம்மிடம் காணப்படும் வளங்கள் மிக குறைவாகவே உள்ளன. மத்திய அரசினால் வழங்கப்பட தீர்மானித்திருந்த ஆயிரம் மில்லியன் ரூபா நிதி இந்த வருடத்திற்குள் செலவளிக்கப்பட மாட்டாது என கூறி 850 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இந்நிதி மூன்று வைத்தியசாலைகளுக்கு பங்கிடப்பட்டுமுள்ளது.

இந்த நிலையிலும் கூட இந்த நிதியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன. தற்போது வருடத்தின் நடுப்பகுதி நடைபெற்று கொண்டு இருப்பதனால் இன்னமும் ஆறு மாதங்களே உள்ளன. அதற்கிடையில் இந்த நிதியை செலவு செய்தாக வேண்டும். இல்லையேல் நிதி திரும்பி சென்றுவிடும் அபாயமும் காணப்படுகின்றது.

இந்த நிதிக்கான வேலை திட்டங்கள் வைத்தியசாலை தரப்பில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. காணி ஒதுக்கீடு, மண் பரிசோதனை உள்ளிட்ட அனைத்து பணிகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. ஆகையால் திட்டத்தினை செயற்படுத்த வேண்டியவர்கள் காலத்தையும் அவசிய த்தையும் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். (இ-4)

## பொதுமக்களைக் கண்டதும் திருடர்கள் தப்பியோட்டம்



நாவாந்துறை சென். நீக்கிலார் தேவாலயத்தில் தூய நற்கருணை பேழையை திருடுவதற்கு முயற்சி செய்த திருடர்கள் பொது மக்கள் வருவதைக் கண்டதும் தப்பி யோடியுள்ளனர்.யாழ். நாவாந்துறை சென. நீக்கிலார் தேவாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கி ழமை அதிகாலை 5 மணியளவில், தேவாலய மணி அடிக்கும் சங்கிடுத்தாரி ஆலயத்தினை திறந்து விட்டு மணியையும் அடித்து விட் டுச் சென்றுள்ளார்.

பின்னர் காலை 9 மணியளவில் தேவாலயத்திற்கு சென்ற பொது மக்கள் தேவா லயத்தில் நற்கருணை வைக் கப்பட்டுள்ள பேழை உடைக் கப்பட்டிருப்பதனையும் தேவ நற்கருணையுடனான பாத் திரம் பலிபீடத்தின்மேல் எடுத்து வைக்கப்பட்டிருப்ப தையும் அவதானித்துள்ள னர். உடனே குறித்த தகவலை தேவாலய பங்குத் தந்தை யிடம் தெரிவித்துள்ளனர்.

தங்கத்திலான பேழை போல் காட்சியளித்தமை யால் திருட முயற்சித்திருக்க லாம் என பொதுமக்களால் சந்தேகிக் கப்படுவதுடன் குறி த்த பிரதேசத்தில் மக்கள் நட மாட்டம் அதிகமாக காணப்ப டுவது வழக்கம் தேவால யத்திற்கு வந்து வழமையாக அடிக்கடி மக்கள் தரிசிப்பது வழக்கம். ஆனால் யாரும் இதனை கவனிக்கவில்லை என்றும் தெரிய வருகிறது.

மேலும் தேவாலய பங் குத் தந்தை தேவ நற்கருணையை பர்துகாப்பான இட த்திற்கு எடுத்துச் சென்று அவரது பணிமனையில் வைத்திருப்பதாகவும், திருட் டுச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறை ப்பாடு பதிவு செய்யப்பட்டு ள்ளது. (இ-9)




### மூன்று கவிதை நூல்களின் வெளியீட்டு விழா 18ம் திகதி

சமரபாகு கலை இலக்கிய மன்றம் நடத்தும் சமரபாகு சீனி உதயகுமார் எழுதிய 'காதல் வந்த சாலை', காதலியுடன் பேசுதல், 'கனகலிங்கம் மாமாவும் பரிமள ஆண்டியும் 'ஆகிய மூன்று கவிதை நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.24 மணியளவில் வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் கலந்து கொள் ளவுள்ளார்.

இதன் போது நூல் வெளியீட்டுரையினை கவிஞர் த. அஜந்தகுமார் நிகழ்த்தவுள்ளார்.

சிறப்புரையினை முல்லைத் தீவு முத்தையன்கட்டு வலது கரை மகா வித்தியாலய அதிபர்.சி. ராகேந்திரராஜா நிகழ்த்தவுள்ளார்.தொடர்ந்து நூல் விமர்சன உரைகளை கவிஞர் இமையூர் தாசன், கவிஞர் வன்னியூர் செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-5)

## விபத்தில் மாணவன் பலி; சாரதி கைது

# பிணை மீளாய்வு மனுவை இளஞ்செழியன் பரிசீலிப்பு

திருநெல்வேலி வாகன விபத்தில் பாடசாலை மாணவன் மரணமடைந்த வழக்கில் கைது செய்யப்பட்டவருக்கு யாழ் நீதவான் பிணை வழங்க மறுத்ததையடுத்து, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

இவ் வழக்கின் எதிர் மனுதாரர்களை மன்றில் பதிலளிக்குமாறு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தியில் வாகன விபத்தில் பாடசாலை மாணவன் மரணமடைந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள வருக்கு யாழ்.நீதவான் பிணை வழங்க மறுத்ததையடுத்து, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை மீளாய்வு மனுவை கடந்த வெள்ளிக்கிழமை பரிசீலனை செய்த போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தியில் கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்து சம்பவம் ஒன்றில் பாடசாலை மாணவன் பார்த்தீபன் சுபஸ்திக் கன் மரணமடைந்தார். அவருடைய தாயார் பலத்த காயத்திற்கு உள்ளாகினார். இந்த சம்பவத்தில் வாகன விபத்தை ஏற்படுத்திய சாரதி ஜெயபாலச்சந்திரன் பிரகாஷ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கோரி யாழ். நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை நிராகரித்து, அந்தக் கைதியைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி யாழ். நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

யாழ்.நீதவான் நீதிமன்றத்தின் இந்தக் கட்டளையை எதிர்த்து சட்டத்தரணிகள் யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணை மீளாய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். நீதவான் நீதிமன்றத்தின் பிணை நிராகரிப்பு கட்டளையை ரத்துச் செய்து, விளக்கமறியல் கைதியான பாலச்சந்திரன் பிரகாஷை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என இந்த மனுவைத் தாக்கல் செய்த சட்டத்தரணிகள் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தனர்.

இந்தப் பிணை மீளாய்வு மனுவையும் சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தையும் பரிசீனித்த நீதிபதி இளஞ்செழியன், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் சட்டமா அதிபருக்கும் இந்த பிணை மீளாய்வு மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவித்தல் வழங்கி எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்தி வைத்துள்ளார். (செ-4-9)



யாழ். கொட்டடியில் அண்மையில் நடைபெற்ற புத்தாண்டு விழாவின் போது ...

## 26 ஆண்டுகள் கடந்த நிலையிலும்

# "அகதி வாழ்க்கை வாழ்கின்றோம்" ஜனாதிபதியே கருணை காட்டுங்கள்

## நாளை மறுதினம் தெல்லிப்பழையில் வழிபாடு


(யாழ்ப்பாணம்)

யாழ் வலி. வடக்கு மக்கள் இன்னமும் குடியேற்றப்படவில்லை என்பதை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தும் வகையில் வலி. வடக்கு மீள் குடியேற்றம் புனர் வாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு ஒன்று நடைபெறவுள்ளது.

வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து 26 வருடங்கள் நிறைவையும் 27 ஆம் ஆண்டிலும் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் அகதி வாழ்க்கை வாழ்வதை தெரிவிக்கும் முகமாகவும் விரைவில் தமது சொந்த நிலங்களுக்கு செல்ல வேண்டும் என்பதை பிரார்த்தித்தும் இந்த விசேட வழிபாடு நடைபெறவுள்ளது.

எனவே குறித்த தினத்தில் அனைத்துப் பொது மக்களையும் மீள் குடியேற்ற புனர்வாழ்வு சங்க உறுப்பினர்களையும் ஒன்று கூடுமாறு மீள் குடியேற்றம் புனர் வாழ்வு சங்க தலைவர் அ. குணபாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ-9)

## இணுவில் கந்தசுவாமி கோவில்




இன்று நான்காம் திருவிழா (13.06.2016)

ஒரு வரம் அருள்வாயே...

கூறிடும் வினை தீர்க்கும்– எங்கள்
குமர வடி வேலனே..
பாரிலே போரிடி ஓய்ந்ததனால்– பெரும்
பஞ்சம் பிணிகளே மாய்ந்ததனால்...
அஞ்சா நெஞ்சங் கொண்டே வாழ்ந்திடவே
ஆனந்தம் எம் வாழ்வில் மலர்ந்திடவே
குஞ்சரி வள்ளியோடு நீ உலா வரவே
குதூகலம் பொங்க உன் திரு நாளிலே
இரு மண வாட்டியரை – இறுக
இரு கரம் பற்றிய மணவாளா
ஒரு மணம் புரியாதோர்க்கு– நீ
ஒரு வரம் ஏன் இன்னும் அருளவில்லையோ.

சண் ஜெகன்

அனுசரணை: நான்காம் திருவிழா உபயகாரர்

# மயிலிட்டி மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

## "எமது நிலம் எமக்கு வேண்டும்"

ஜனாதிபதியின் யாழ்.வருகையின் போது எமது நிலம் முழுமையாக விடுவிக்கப்பட்டிருக்கும் என நம்புவதாக மயிலிட்டி மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பிய மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1990.06.15 இல் எமது இடத்தை விட்டு இடம்பெயர்ந்தோம். ஒரு சில கிழமைகளில் நாம் திரும்பவும் வந்து வாழுவோம் என்ற நினைவுடன் இடம் பெயர்ந்தோம். ஆனால் இப்படி 27 வருடங்களாக ஏதிலிகளாக, அநாதைகளாக , அகதிகளாக என்ற பெயர் தாங்கி வறுமை நிலையில் அடிமைகளாக வாழுவோம் என்று கனவிலும் நினைக்கவில்லை.

அப்படித் தெரிந்திருந்தால் உயிர் எமது இடத்தில் போனாலும் இடத்தை விட்டு நகர்ந்திருக்கமாட்டோம். ஜனாதிபதி அவர்களே! , நீங்கள் கருணை உள்ளவர்கள் . இரக்கம் கொண்டவர், மனிதம் நிறைந்த தலைவர் , சொந்த இடம் விட்டு விலகுவதும், வாழ்வதும் எவ்வளவு துன்பம் தரும் என்பதை உணரக்கூடிய புரிந்துணர்வாளர் நாம். எமது மூதாதயர் தந்த 1/2 பவுண் நகை என்றாலும் அதனைப் பரம்பரை பரம்பரையாக பேணிப் பாதுகாக்கும் மரபு உடையவர்கள்.எமது பாட்டன், பூட்டன் வாழ்ந்து எமக்குத் தந்த உரிமை நிலங்களை எப்படிப் பேணி வாழ ஆசைப்படுவோம்.

அந்தக் காணிகளில் நாம் வாழ முடியாமல் இருந்தால் , எவ்வளவு வேதனையையும் தாக்கமும் அடைவோம் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.1990 வரையில் பலாலி விமானத் தளத்தில் விமானங்கள் நாம் குடியிருந்த பொழுதுதான் ஏறி இறங்கிப் பயணம் செய்தது.அதை நாங்கள் சௌகரியக் குறைவென்று சுட்டிக் காட்டியதுமில்லை .நீங்களும் பாதுகாப்பில்லை என்று கூறி நிறுத்தவும் இல்லை. சுமுகமாக பயணங்கள் நடைபெற்றுத்தான் வந்தது.எனவே எமது மண்ணில் வளங்கள் தெரியும். எமது உழைப்பும் தெரியும். எனவே எம்மை எமது சொந்த இடங்களில் உரிமையுடன் வாழ வைத்து பருத்தித்துறையிலிருந்து இ.போ.ச பேருந்தை (763) கே.கே. எஸ் வரை பாதை திறந்து பயணம் செய்யும் வசதியையும் செய்து தரும்படி தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்.மீன் பிடியிலும் விவசாயத்திலும் ஈடுபட்டு சிறப்புடன் உழைத்து எமது நாட்டுக்கும் எமது ஊருக்கும் வருமானத்தை ஈட்டித்தர முயல்வோம் என்றும் வாக்குப் பண்ணுகிறோம். எங்களுக்கு நல்லாட்சிக்கு ஒரு தலைவராக செயற்படும் நீங்கள் எங்கள் முகாமிற்கு தேடி வந்து ஆறுதல் கூறி உங்கள் ஒவ்வொருவரின் உரித்தனாக காணிகளில் சுதந்திரமாக வாழவைப்பேன் என்று வாக்குபண்ணிச் சென்றீர்கள். அதனை வேதவாக்காய் ஏற்று காத்திருக்கிறோம்.

நீங்கள் வாக்குப் பண்ணிய காலமும் நெருங்கி வருகின்றது. எங்கள் மனதில் நம்பிக்கையும் பிறக்கின்றது.

அதேவேளை சில அதிகாரிகளின் பேச்சினால் ஏக்கமும் தோன்றுகின்றது.


ஆனால் துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக எம்மோடு கூட இருந்து உண்ணா நோன்பில் கலந்து நாம் ஆட்சிக்கு வந்தால் மயிலிட்டி மக்களை அவர்கள் இடத்தில் குடியேற்றிடுவேன் என்று உறுதி அளித்த எமது பிரதமரும் ஆறு மாதத்தில் உங்கள் இடத்தில் குடியேற்றுவேன் என்று நம்பிக்கை தந்து எங்கள் ஜனாதிபதியான நீங்களும் ஒன்றாக ஆட்சியிலிருப்பதால் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

நீங்கள் விரைவில் யாழ்ப்பாணம் வருகை தரும்போது எங்கள் இடம் முழுமையாக விடுபட்டு விட்ட செய்தி எமக்கு கிடைக்கும். உங்களை நாம் அனைவரும் சேர்ந்து நன்றி உணர்வுடன் வரவேற்க காத்திருப்போம்.

இம்முறையும் எமக்கு ஏமாற்றம் அளிக்கப்பட்டால் நாம் வீதியில் இறங்கி தொடர் போராட்டம் செய்வோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வெலிக்கடை சிறைக்குள் 27 கைதிகள் படுகொலை

## மற்றுமொரு சிக்கலில் அநுர



ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் சாட்சிகளை மறைத்தமை மற்றும் அச்சுறுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு எதிராக மேலும் பல கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் 27 கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அநுர சேனாநாயக்கவுக்கு தொடர்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெலிக்கடை சம்பவம் தொடர்பில் சாட்சிகள் உள்ளதாக குறித்த தகவல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக பொலிஸ் போதை தடுப்பு பிரிவின் முன்னாள் முக்கிய அதிகாரிகள் பலருக்கு எதிராகவும் வெலிக்கடை சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்திற்கு மேலதிகமாக 2012ஆம் ஆண்டு பிரபல வர்த்தகர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலும் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்படவுள்ளது. (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:22<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BAலண்டன் NOT PR<br>தொ.இ: B/5919 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 13செவ் 4 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:பல் வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5951 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:18சூரிசெவ் 6 இல்<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் லண்டன் NOT PR<br>தொ.இ: B/5920 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 37செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Phd/ அரசதொழில் அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5956 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 34<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5922 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 30செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.COM<br>தொ.இ: G/5961 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 40சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5923 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 10<br>உயரம்: 5'4".<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5962 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# தமிழினத்தை தலைநிமிரச் செய்ய ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் தெரிவிப்பு

(குருமன்காடு)

தமிழினத்தை தலைநிமிரச் செய்யும் வகையில் ஆசியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆசிரியர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

முப்பது ஆண்டுகள் அகிம்சைப் போராட்டம். முப்பது வருட ஆயுதப் போராட்டம் நடந்தும் எந்தவிதமான தீர்க்கமான முடிவும் இன்றி நிர்க்கதியாகியிருக்கின்றோம். எனவே தற்போது எமது உரிமைகளை பெற்றுக் கொள்ள ஒரே மார்க்கம் இராஜதந்திர ரீதியாக உரிமைகளை பெற்றுக்கொள்வதாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலே இரண்டு மிக முக்கிய தேவைகள் இருக்கின்றது. அதிலொன்று பாதிக்கப்பட்ட பிரதேசத்தை கட்டியெழுப்புவது. அடுத்து இலங்கையில் யுத்தம் இடம்பெறுவதற்கு முன்னர் கல்வியிலும், அரச பதவிகளிலும் சிறந்து விளங்கிய தமிழ் சமூகம் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதாகும்.

எனவே இந்த நாட்டில் மீண்டும் ஒருமுறை தமிழினம் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமாக இருந் தால் நிச்சயமாக அது கல்வியால் மாத்திரமே முடியும். அந்த வகை யில் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்படுகின்ற ஆசிரியர்களினால் நிச்சயமாக நாங்கள் குறுகிய காலத் தில் எமது எதிர்கால சந்ததியினரை உருவாக்க வேண்டிய தேவை இருக் கின்றது.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் எங்களுக்கு வழங்கப்படும் நிதியிலே முற்று முழுதாக நாம் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது. யுத்தத்தால் கணவனை இழந்த, பெற்றோரை இழந்த மற் றும் வாழ்வாதாரத்தை சவாலாக கொண்டுள்ள பல குடும்பங்களை பார்க்க வேண்டிய கடமையும் தேவையும் எமக்கு இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

எங்களுடைய கல்வியின் நிலை தற்போது கீழே தள்ளப்பட்டுள்ளதாக சொல்கின்றார்கள். அதற்கு ஆதாரமாக புள்ளிவிபரங்களை காட்டுகின்றார்கள்.

ஒரு குடும்பத்தில் எட்டுப் பிள்ளைகள் இருந்தால் ஒருவர் கடைசிப் பிள்ளையாகத்தான் இருப்பார். நாட்டில் 98 வலயங்கள் இருந்தால் ஏதோவொரு வலயம் கடைசியாகத் தான் வரும். உசைன் போல்டுடன் நூறு மீற்றர் ஓடும் போது ஒருவர் கடைசியாக வருவார். அவர் கடைசியாக வருவது பிரச்சினை இல்லை. அவர் கடைசியாக எவ்வளவு தூரம் பின்னுக்கு வருகின்றார் என் பதனை பார்த்துத்தான் பேச வேண்டும் என்றார். (2-250)




# இராமநாதபுரம் பழைய கண்டி வீதி புனரமைப்பு வேலை ஆரம்பம்



வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரினால் இவ்வருடம் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் வீதி புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள தலா 6 மில்லியன் ரூபா நிதியில் இருந்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.தவநாதன் பரிந்துரைக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி இராமநாதபுரம் பழைய கண்டி வீதி புனரமைப்பிற்கு ஆரம்ப கட்ட அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 10 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் ,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி விவசாய கல்லூரியின் அதிபர் சகிலா பாணு, கிளிநொச்சி முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் ஜெகநாதன் மற்றும் கிராம மட்ட சங்கங்களின் உறுப்பினர்கள் ,பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி வீதியானது பாடசாலை, சந்தை தொகுதி என்பவற்றுக்கான பிரதான வீதியாக காணப்படுவதனால் இதனூடாக பயணம் செய்வதற்கு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் படும் கஷ்டங்களை கருத்தில் கொண்டு 900 மீற்றர் வீதி புனரமைக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. (2-15-312-281)




வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் கனகராயன் குளம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# வவுனியா வடக்கு ஆசிரியர் மாநாடு

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் கனகராயன்குளம் மகாவித்தியாலய கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், ஆய்வறிக்கைகள் மற்றும் அரங்க செயற்பாடுகள் ஆகியவற்றைவவுனியா வடக்குகல்விவலய ஆசிரியர்கள் வழங் கியிருந்தனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி பேருரையாற்றியிருந்தார். இதன்போது, இக்கல்வி வலயத்தில் பணியாற்றி ஒய்வு பெற்ற கல்வியியலாளர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

வடக்குமாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன்,ஆர். இந்திரராஜா உட்பட கல்வித்துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர்.(2-250)



வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினால் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினருக்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக 40 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் பரந்தனில் உள்ள வன்னி விழிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் வைத்து இரு கண்களும் பார்வையிழந்த 20 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:- மல்லாவி செய்தியாளர்)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆயிரம் பட்டதாரிகள் உள்வாங்கப்படுவர்

## வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(பரந்தன்)

வடக்கு மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆயிரம் பட்டதாரிகள் உள்வாங்கப்படுவார்கள் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

குறித்த வேலைத்திட்டத்தை எதிர்வரும் மாதம் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவினால் இக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

பிரஜைகள் குழுவினால் முன் வைக்கப்பட்ட கருத்திற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார். (2-312)

# வாழ்வாதார உதவி வழங்கி வைப்பு

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு ஒளிரும் வாழ்வு அமைப்பினால் சுவிஸ் வாழ் அன்பர்களின் நிதி அனுசரணையுடன் வள்ளுவர்புரம் பிரதேசத்தில் யுத்தத்தினால் உடல் அங்கக் குறைபாட்டிற்கு உள்ளான நிலையிலும் தோட்டப் பயிர்ச் செய்கை மூலம் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வரும் சுந்தரலிங்கம் பரமலிங்கம் என்பவருக்கு அவரது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நீர்ப்பான வசதி ஏற்படுத்தி அதனைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அமைப்பின் தலை வரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தருமாகிய ப. இராசகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இதில் ஒளிரும் வாழ்வு அமைப்பின் செயலாளரும் பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தருமாகிய இ. அம்பிகைபாலன், அவ் வமைப்பின் பொருளாளர் க.யோக நாதன் அப்பிரதேச கிராம அலுவலர்,சமுர்த்தி அலுவலர், மாதர் சங்கத் தலைவி மற்றும் ஒளிரும் வாழ்வு அமைப்பின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(2-281)

# யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் வீட்டுத்திட்டங்கள்

## சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(பரந்தன்)

**நாட்டில் இடம் பெற்று முடிந்த யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முன்னாள் போராளிகள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரை முன்னுரிமைப்படுத்தி எதிர் வரும் காலங்களில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படும் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் 100 பேருக்கு சீமெந்து பக்கெட்டுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் சீமெந்து பக்கெட்டுகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கு அரசாங்கத்தினால் ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் வடக்கு கிழக்கிற்கு 65 ஆயிரம் வீடுகள் வரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். குறித்த 65 ஆயிரம் வீடுகள் பொருத்து வீடா அல்லது கல்வீடா என்ற தீர்மானம் இன்னமும் எட்டப்படவில்லை. விரைவில் அவை மக்களுக்கு குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு அதிகளவில் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த கால அரசாங்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை. ஆதலால் எதிர்வரும் வீட்டுத்திட்டங்கள், முன்னாள் போராளிகள், மாற்று திறணாளிகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என முன்னுரிமைப்படுத்தி வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கத்தின் போது புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் நடுத்தெருவில் கைவிடப்பட்ட நிலையையே உணர்ந்துள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் அந்நிலை மாற்றப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தும் வகையில் பல திட்டங்களுக்குள் அவர்களை உள்வாங்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2-15)

## முன்பள்ளி விளையாட்டு விழா

தர்மபுரம் மேற்குப் பகுதி புதிய உதயம் முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன் பள்ளிப் பொறுப்பாசிரியர் திருமதி சே. றீற்றா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கண்டாவளைப் பிரதேச செயலாளர் த.முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் இணைந்த சிவில் நிர்வாகக் கட்டளை அதிகாரி கேணல் டபிள்யூ. டபிள்யூ. ரத்ன பிரிய பந்து , கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறிவர்த்தன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தி னர்களாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி எம். எம்.டி என். சதுரங்க, கிளிநொச்சி தர்ம ரம் இல.01 பாடசாலை அதிபர் திருமதி க.இந்திராகாந்தி , தர்மபுரம் மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி அஜந்தா விஜயகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-309)





கிளிநொச்சி மாவட்டத்திற்கு அரசினால் வழங்கப்பட்ட ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான திட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் செல்வாநகர் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

## மன்னார் கல்வி வலய ஆசிரியர் மாநாடு இரு தினங்கள்

(மல்லாவி)

மன்னார் வலயக்கல்வி அலுவலக ஆசிரியர் மாநாடு நாளை செவ்வாய்க்கிழமை, மறுநாள் புதன்கிழமை ஆகிய இரு நாட்கள் இடம் பெறவுள்ளன.

இதற்கமைய முதலாம் நாளான நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மன்/சென்.சேவியர் ஆண்கள் கல்லூரியில் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட க்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் பேருரை, ஆய்வரங்கம் என்பன நடைபெறும். இரண்டாம் நாள் அமர்வுகள் மறுநாள் புதன்கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறும்.

இதில் காலை அமர்வு 8.30 மணிக்கு மன்/அல் அஸ்ஹார் தேசியப்பாடசாலை, மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணகல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

காலை நிகழ்வுகளாக ஆசிரியர்களின் ஆக்கங்கள் தொடர்பான கண்காட்சி நடைபெறும். மாலை அமர்வு பிற்பகல் 3 மணிக்கு மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி திறந்த வெளியரங்கில் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன் தலைமையில் நடைபெறும்.

மாலை நிகழ்வாக ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். (2)




## ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு செல்வாநகரில் அடிக்கல் நாட்டல்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு அரசினால் வழங்கப்பட்ட ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான திட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் செல்வாநகர் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனினால் அடிக்கல் நாட்டப்பட்டு குறித்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சருடன் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். குறித்த பகுதியில் 5 வீடுகளிற்கு அடிக்கல் நாட்டப்பட்டமை குறிப்பிடதக்கதாகும். (2-15)

## தமிழ் மக்களுக்கு மாற்று அரசியல் ஒன்று அவசியம்

### த.தே.மக்கள் முன்னணி செயலாளர் வலியுறுத்து




தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைமை தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறது என த.தே. மக்கள் முன்னணி செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சமகால அரசியல் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பு கடந்த காலங்களில் பல்வேறு விடயங்களை வலியுறுத்தி தேர்தலில் வெற்றி பெற்றது. ஆனால் மக்களிற்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளது.

காலத்திற்கு காலம் தமிழ் மக்களை ஏமாற்றும்செயலை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமை செய்து வருவதாக குறிப்பிட்ட அவர், இவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வரும் தமிழ் மக்களிற்கு மாற்று அரசியல் ஒன்றுஅவசியம் என குறிப்பிட்டார். கடந்த சில நாட்களிற்கு முன்னர் எதிர்க்கட்சி தலைவர் ஜனாதிபதியை சர்வதேசம் பாராட்டி வருவதாக குறிப்பிட்டதாகவும், அரசு யாழிலும், முல்லைத் தீவிலும் புத்தர் சிலைகளை வைப்பதில் தீவிரம்காட்டி வரும் நிலையில் ஜனாதிபதியின் செயற்பாடுகளை த.தே. கூட்டமைப்பு தலைவர் பாராட்டி வருகின்றமை நகைப்புக்குரியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் என்ற பதவியை தக்க வைப்பதற்கு 16 பேரும் அவருடன் இணைந்து செயற்படுவதாக தெரிவித்த கஜேந்திரன், இவ்வாறான உண்மை நிலையை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்என குறிப்பிட்டார். எதிர்க்கட்சி தலைமை, உள்ளிட்ட அரச சலுகைகளை அனுபவிப்பதற்கே குறித்த தரப்பினர் முயல்வதாகவும், தமிழ் மக்களின் இறைமையைபாதுகாக்க வழங்கப்பட்ட வாக்குறுதிகளை காப்பாற்ற அவர்கள் பாடுபடுவதில்லை எனவும் குறிப்பிட்டார். இந் நிலையில் தமிழ் மக்களிற்கு ஓர் மாற்று அரசியல் தேவை என்பதை வலியுறுத்திய கஜேந்திரன், எதிர்காலத்தில் மக்களின் தேவை அறிந்து செயற்படக்கூடியவர்களை மக்கள்பிரதிநிதிகளாக்க வேண்டிய பொறுப்பில் தமிழ் மக்கள் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# நிதிக்குற்றப் புலனாய்வுப்பிரிவு 30 ஆம் திகதியுடன் கலைப்பு

(கொழும்பு)

பொலிஸ் நிதிக்குற்றப் புலனாய்வுப்பிரிவு எதிர்வரும் 30ஆம் திகதி வரை செயற்படுவதுடன் அதன் பின்னர் கலைத்து விடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.



இலஞ்சம், ஊழல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை இல்லாது செய்வதற்கு இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நிதிக் குற்றப் புலனாய்வு துறையினரிடம் வாக்குமூலமளிக்கச் சென்றிருந்த போது, இந்த நிலைமை குறித்து அங்கிருந்த அதிகாரிகளின் ஊடாக இது தனக்கு தெரியவந்ததாகவும் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அதற்கமைய, இம்மாதம் 30 ஆம் திகதியுடன் நிதிக் குற்றப் புலனாய்வு துறையின் காலம் நிறைவடைவதால் அதன் பின்னர் அதனை நீடிக்காமல் கைவிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரி குறிப்பிட்டதாகவும் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டினார். (இ-5)

# கதிர்காம ஆலயத்தை நோக்கிய 400கிலோமீற்றர் பாதயாத்திரை

கதிர்காமத்தை நோக்கிய 400 கிலோமீற்றர் பாதயாத்திரை நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பை வந்தடைந்தது.

இப்பாதயாத்திரை கடந்த மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமாகி திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கூடாக எதிர்வரும் 4 ஆம் திகதி கதிர்காமம் முருகன் ஆலய திருத்தலத்தை அடையவுள்ளது.



இடை நடுவில் குறித்த மாவட்டங்களின் பிரதான ஆலயங்களில் தங்கி மேற்படி பக்தர்கள் கதிர்காமத்தை அடையவுள்ளனர். இப்பாதை யாத்திரை குழுவில் ஆண்கள், பெண்கள் அடங்கலாக சுமார் 120 பேர் உள்ளடங்குகின்றனர். (இ-5)

# அனலைதீவு மக்களின் தேவைகள் படிப்படியாகப்பூர்த்தி செய்யப்படும்

## முன்னாள் எம்.பி.உறுதியளிப்பு




அனலைதீவு பகுதியில்உள்ளமக்களுடைய அடிப்படைத் தேவைகள் படிப்படியாக பூர்த்தி செய்து கொடுக்கப்படும் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய வி.ஜே. ஜெகன் தெரிவித்துள்ளார்.

அனலைதீவு பகுதியில் வாழும் மக்களால் எம்மிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நேற்று முன்தினம் அப்பகுதி மக்களுடன் அம்மக்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

அக் கலந்துரையாடலின் போது குறித்த பகுதியில் பல காலமாக அடிப்படை வசதிகள்எவையும்பூரணப்படுத்தப்படவில்லை என்றும் மின்சாரம், வீட்டுத்திட்டம், மலசலகூடம் என்பன தமக்கு உரிய முறையில் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

அத்துடன் வீதிப் புனரமைப்பு பல காலமாக மேற்கொள்ளப்படவில்லை என்றும் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் மாணவர்கள் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த மக்களுடைய பிரச்சினைகளை எழுத்துவடிவம் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடாக ஜனாதிபதிக்கு உடனடியாக தெரியப்படுத்தி அவர்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை விசேடமாக பெற்று குறித்த வாழ்வாதாரப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

பூரணப்படுத்தப்படாமல் உள்ள வேலைகளை உரிய அதிகாரிகளுடன் கதைத்து விரைவில் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாக செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


# இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு எட்டாம் திருவிழா



## நின் சேய்கள் எமைக் காத்திடுவாய்!

வங்கக் கடலலைகள் தங்கி நிதம் தாலாட்ட
எங்கும் புகழ்மிகுந்த எழில் கொஞ்சும் நயினையிலே
தங்கித் தணிந்தருள் சொரியும் – தாயே
பங்கமின்றி நாம் வாழ பணிந்து வேண்டுகிறோம்
எங்கள் தமிழினத்தின இன்னல் களைந்தருள்வாய்
எம்மக்கள் இன்புற்றிருக்க இரங்கிவரம் தந்திடம்மா
தாயே நின் சரணடைந்தோம்
சேய்கள் எமைக் காத்திடுவாய்.

ந. ஒளிவண்ணன் (குலைத்தீவான்)
கல்விக்கோட்டம், வேலணை



## காப்பாய் தாயே

தாலாட்டும் அலைமேலே
தள்ளாடும் ஓடம் போல
வலு இழந்து வலி சுமந்து
நிலை குலைந்த போதும் தாயே
நித்தம் உனை தொழுது நின்றேன்
என் துயரம் பாராயோ
உற்ற துணை உன்னை யன்றி
வேறொருவர் உண்டோ அம்மா
நித்தம் எனை காத்திடுவாய்
நினைவனைத்தும் நீயே அம்மா

தென்கோவையூர் ம.கஜேந்தினி

## அமுத சுரபியே! அன்னையே!



கடல் சூழ் நயினையிலே
குடிகொண்ட கருணை வெள்ளமே
அருள்மழை பொழிந்தே எமது
இருள்தனைக் களைவாய்
அன்னையே அமிர்தம் போன்றவளே
என்னையும் ஒரு மனிதனாய்
இந்த உலகிற்கு ஈன்றவளே
அலைகடல் மேல் பயணங்கள்
ஆற்றொணாத பெருந்துயரங்கள்
அல்லறுகின்ற இந்த மக்களுக்கு
ஆறுதல்தான் தருவாயே

ராஜா செல்வநாதன், கிளிநொச்சி

## மணித்தீவின் அம்மா

மணித்தீவின் அம்மா மணிபல்லவி தாயே
மானிடர் குறைபோக்கும் மாணிக்க நாயகியே
என்குறை போக்கி எமக்கருள் புரியுமம்மா
எட்டுத்திக்கும் போற்றும் எழிலரசி தாயே
அன்னதானத்திற்கோர் அமுத சுரபிதான்
அனைவரும் உண்டதனில் ஆனந்தம் பெறுகின்றாள்

சஜீ-லோஜி, நெடுந்தீவு

# மகிந்த; கூட்டு எதிர்க்கட்சியுடன் இனி பேச்சுவார்த்தை இல்லை

## சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும், கட்சியின் மத்திய செயற்குழு எடுக்கும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளும் வரையில் அவர்களுடன் எந்தவொரு நல்லிணக்க பேச்சுவார்த்தைகளும் இடம்பெற மாட்டாது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ. ல.சு.கட்சியின் மத்திய செயற்குழு கடந்த காலங்களில் எடுத்த எந்தவொரு தீர்மானத்துக்கும் கட்டுப்படாது, கட்சி உறுப்பினர்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் இவர்கள் செயற்பட்டதனால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்கு கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

## இ.போ.ச.யாழ்.சாலையில் பணிபுரியும்

# தொழிலாளர் அனுமதியின்றி ரூ.500 பணம் கழிக்கப்பட்டமைக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலையில் கடமையாற்றும் தொழிலாளர்களின் மே மாத சம்பளத்திலிருந்து தொழிலாளர்களின் அனுமதியைப் பெறாமல் 500 ரூபாபணம்கழிக்கப்பட்டமையை தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிப்பதாக அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.சாலையில் கடமையாற்றுகின்ற அனைத்து தொழிலாளர்களின் மே மாத சம்பளப் பட்டியலில் ரூபா 500 கழிக்கப்பட்டுவங்கிகளில்வைப்பிலிடப்பட்டுள்ளன.

உரிய அதிகாரிகளிடம்வினவிய போது, இது விடயமாக தென்பகுதியில்ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாக அறவிடப்பட்டதாக கூறினார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மனவுமந்து அனர்த்தங்களின் மூலம் கைதூக்கி விடுவது மனித நேயமாகும்.

ஊழியர்களிடம் அனுமதி பெறாது ஆனால் இரகசியமாக பணத்தை அபகரித்து உதவுவது எவ்வகையில் நியாயமானதாகும்.

இச் செயலுக்கு அனுமதி அளித்த குறித்த அதிகாரியின் செயற்பாடானது அநாகரிகமற்றதும் சுயநலம் கருதியும், தென்னிலங்கை அரசியல்வாதிகளின் செல்வாக்கை மேலும் உயர்த்தித் தங்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுக்களை மூடி மறைத்துத் தாங்கள் தப்பித்துக் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட கபட நாடகமாகவே நாங்கள் கருதுகின்றோம்.

இதற்கு முன்பும் இவ்வாறான நடவடிக்கை மூலம் பணம்அறவிட்டதையும், உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைக்காக உயர் அதிகாரிகளிடம் முறையிட எத்தனித்ததன் காரணமாக பணம் தரும் ஊழியர்களிடம் அவசர அவசரமாக வழங்கப்பட்டதையும் மீண்டும் நினைவு கூருகின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-9)

# கோப் கமிட்டியில் மகிந்தானந்த அளுத்கமகே

(கொழும்பு)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கோப் கமிட்டியில் (COPE) நியமிக்கப்பட்டு, இரண்டு வாரங்களாவதாக, குறித்த குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

26 பேர் கொண்ட கோப் கமிட்டியில் பிரசன்ன ரணதுங்கவுக்கு பதிலாகவே அவர் நியமிக்கப்பட்டுள்ளதாக, சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்படி கடந்த மே மாதம்1 7ஆம் திகதியளவில் பிரசன்ன ரணதுங்கவின் பெயர் நீக்கப்பட்டு, மகிந்தானந்த அளுத்கமகேவின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# அலங்கார அபிஷேக உற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலய துர்முகி வருஷ அலங்கார அபிஷேக உற்சவப் பெருவிழா நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 27 தினங்கள் தினமும் பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (இ)

# அந்தோனி! கருணை மழை பொழியுமையா!



இன்று திங்கட்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் கோயில் தேர்த்திருவிழா

இலைக் கஞ்சி குடிப்பதற்கே வழியுமின்றி
அன்றாடங் காய்ச்சிகளாய் தவிப்போர் இங்கே!
கொலை களவு வன் செயல்கள் செய்து வெறியால்
கூத்தாடும் வீணரொரு பக்கம் ! வண்ணம்
கலைந்து விட்ட ஓவியம் போல் எங்கள் வாழ்வு
கண்களிலே நீரோடிக் கரையு தையோ!
தலைமகனே! அந்தோனி எம்மிடர் அகலத்
தேவமைந்தன் யேசுவிடம் பரிந்து ரைப்பாய்!
நாதியற்றோர் தங்கியாற அகதி முகாம்கள்!
நடந்துபோன கொடுமைகளை நினைக்க வலிக்கும்!
நீதி செத்தா போயிற்று? பேசு கின்ற
நல்லிணக்கம் சமூகத்தில் விரைந்து வராதோ!
மாதரசி மரியாளின் தேவ குமாரன்
மலரடியைப் போற்றித்தேர் ஏறி வந்து
காதனிக்கும் சாந்தி சமாதானம் நிலவக்
கருணை மழை எம் மீது பொழியு மையா!

**சிங்கராயர் வசீகரன்**

# செய்தித்துளிகள்

## மிஹின் லங்கா மூடப்படும்?

மிஹின் லங்கா விமான நிறுவனத்தை மூடுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் ஊழியர்களை ஆதாரம் காட்டி இலங்கையின் பிரதான சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதற்கமைய மிஹின் லங்காவின் பல அதிகாரிகள் ஏற்கனவே ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் சில சிரேஷ்ட அதிகாரிகள் பணிகளில் இருந்து விலகவேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர். (இ-5)

## விபத்தில் குழந்தை பலி!

அநுராதபுரம் - தம்புத்தேகம, நொச்சியாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்தில் 5 வயது குழந்தை உயிரிழந்ததுடன் மூவர் ஆபத்தான நிலையில் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

ஹெம்மாதகமை, தெல்கஹதேனிய பிரதேசத்தில் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.சம்பவத்தில் 25 வயது மதிக்கத்தக்க இலங்கை மின்சார சபை ஊழியர் ஒருவரே உயிரிழந்துள்ளார். (இ-5)

## மனைவிக்கும் கணவனுக்கும் இடையே இடம்பெற்ற கைகலப்பைத் தடுக்கச் சென்றவர் கத்திவெட்டுக்கு இலக்காகிப் பலி

அநுராதபுரம் மஹாபுளங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட கைகலப்பை விலக்கச் சென்றவர், கத்தி வெட்டுக்கு இலக்கான நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அந்நபர், தன்னுடைய நண்பனின் வீட்டுக்கு விருந்துபசாரத்துக்கு சென்றுள்ளார். அங்கு தன்னுடைய நண்பனுக்கும் அவருடைய மனைவிக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, அக்கைகலப்பை விலக்குவதற்கு சென்றபோதே, அவர் கத்தி வெட்டுக்கு இலக்காகியுள்ளார் என்று அறிய முடிகின்றது என பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## 1500 வாகனங்களை காணவில்லை - ரவி

மகிந்த அரசாங்க காலத்தில் பயன்படுத்திய சுமார் 1500 வாகனங்கள் இன்னும் காணாமல் போன நிலையிலேயே உள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதியாளர் சங்கத்துடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இத்னைக் கூறியுள்ளார்.

அமைச்சர்களுக்கான வாகன கொள்வனவுக்கு விலை தீர்மானிக்கும் போது வரிகளுடனேயே அது கணக்கிடப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மருந்து ஒழுங்கு முறை ஆணையகத்தின் நிறைவேற்று அதிகாரியாக கமல் ஜயசிங்க

வைத்தியர் கமல் ஜயசிங்க தேசிய மருந்து ஒழுங்கு முறை ஆணையகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனமா்னது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படடுள்ளது.

இதேவேளை வைத்தியர் கமல் ஜயசிங்க தற்சமயம் குறித்த மருந்துகள் வழங்கும் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தபால் திணைக்கள ஊழியர்கள் வேலை நிறுத்தத்திற்கு தயார்

தபால் திணைக்களத்தில் 22பேருக்கும் அதிகமான ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


புதிய நியமனங்கள் வழங்கும் போது எடுக்கப்படும் நடைமுறைகள், தபால் திணைக்களத்தின் நட்டங்கள் மற்றும் ஊழியர்கள் மீது திணிக்கப்படுவதாலும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் கூட்டுத்தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டாளர் எச்.கே.காரியவசம் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஏழு பேரின் விடுதலைக்காக எழுச்சிப் பேரணி














முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனை பெற்று ஆயுள் தண்டனை யாக்கப்பட்ட 7 பேரையும் விடு விக்கக் கோரி நேற்று முன்தினம் தமிழக மக்கள் மற்றும் நடிகர்க ளால் நடத்தப்பட்ட பேரணியின் போது....

# பேருந்து பள்ளத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 8பேர் பலி

இமாச்சல பிரதேச மாநிலம் சோலான் மாவட்டத்தில் பயணிகள் பேருந்து பள்ளத்திற்குள் விழுந்து விபத்துக்குள் சிக்கியதில் 8 பேர் உயிரிழந்தனர்.

சிம்லாவின் சிர்கோன் பகுதியில் இருந்து மாண்டிக்கு நேற்றுமுன்தினம் தனியார் பயணிகள் பேருந்து ஒன்று 40 பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. பேருந்து மலைப்பாங்கான பகுதியில் சென்ற போது 150 அடி பள்ளத்திற் குள் விழுந்தது. விபத்து குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸாரும். கிராம மக்களும் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். விபத்து நேரிட்ட இடத்திலே 5 பேர் உயிரிழந்தனர். மற்றவர்கள் அனைவரும் காயம் அடைந்தவர்கள். காயம் அடைந்தவர்களில் 3 பேர் வைத்திய சாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். விபத்தில் பிற மாநிலங்களை சேர்ந்த பயணிகளும் உயிரிழுந்து உள்ளனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

விசாரணையில் பயணத்திற்கு தகுதியில்லாத பேருந்தில் 40 பயணிகள் ஏற்றி செல்லப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. காயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் 5 பேரது நிலையானது மிகவும் மோசமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



பேருந்து விபத்திற்குள் சிக்கியதற்கான காரணம் தெரியவரவில்லை. பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். (இ-5)

# பாகிஸ்தான் உளவாளிகள் இருவர் சுட்டுப்படுகொலை

## எல்லையில் தொடரும் மோதல்

காஷ்மீர் எல்லையில் எல்லை இராணுவப்படையுடன் சண்டையிட்ட 2 பாகிஸ்தானிய உளவாளிகள் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானில் இருந்து பஞ்சாப் மாநிலத்திற்குள் பாகிஸ்தானியர்கள் போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதங்களை கடத்தும் சம்பவம் அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. பதன்கோட் தாக்குதல் சம்பவத்தை அடுத்து எல்லையில் இராணுவம் பல்வேறு கட்டங்களாக ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறது. நேற்றுக்காலை பஞ்சாப்பின் பாசில்கா பகுதியில் 3 பாகிஸ்தானியர்கள் போதைப்பொருட்களுடன் ஊடுருவியுள்ளனர். அவர்களை எல்லை இராணுவப் படை இடைமறித்ததை தொடர்ந்து இருதரப்பு இடையேயும் துப்பாக்கி சண்டை நடைபெற்றது.

இராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் 2 பாகிஸ்தானியர்கள் உயிரிழந்தனர். ஒருவர் காயம் அடைந்தார். அவர்களிடம் இருந்து போதைப் பொருட்கள், துப்பாக்கிகள், வெடிபொருட்கள் மற்றும் ஹெரோயின் பக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. (இ-5)

# டமாஸ்கஸ் அதிர்ந்தது

**(டமாஸ்கஸ்) சிரியாவில் ஷியா பிரிவு வழிபாட்டுத்தலம் அருகே நேற்று முன்தினம் இடம் பெற்ற இரண்டு தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தில் சிக்கி 20 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியானதோடு 50 இற்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.**




சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் அருகே ஷியா பிரிவினரின் வழிபாட்டுத் தலமான சயீதா ஜெய்னப் உள்ளது. இந்த வழிபாட்டு தலத்துக்கு உலகமெங்கும் இருந்து ஷியா பிரிவினர் வருவது வழக்கம்.

இதன்காரணமாக அங்கு பலத்த பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. ஆனாலும்ஐ.எஸ் உள்ளிட்ட பல்வேறு தீவிர வாத குழுக்களின் தாக்குத லுக்கு அது இலக்காகி வரு கிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த வழிபாட்டு தலத்தின் நுழைவாயிலில் ஒருவர் மனித வெடிகுண் டாக மாறி தாக்குதல் நடத் தினான். அவனின் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்க வைத்தபோது அந்த பகுதியே குலுங்கியது. இன் னொரு தீவிரவாதி, அங்கு வெடிகுண்டுகளை நிரப்பிய காரை வெடிக்கச் செய்தான்.

இவ்விரு சம்பவங்களி லும் தாக்குதல் நடத்தியவர் கள் உட்பட 20 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 30இற் கும் மேற்பட்டோர் காயம் அடைந் தார்கள். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்க ப்பட்டனர்.

இந்த தகவலை இங்கி லாந்தை தலைமையிடமாக கொண்டு இயங்கி வருகிற சிரியா மனித உரிமைகள் கண் காணிப்பகம் கூறுகிறது.

இதற்கு முன்னதாக இந்த வழிபாட்டு தலத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 7 பேர் பலியாகினர். பெப்ரவரிமாதம் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத் திய தாக்குதலில் 134 பேர் பலியாகினர். நேற்று முன்தி னம் நடந்த தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.(இ-5)




# ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு தொடர்ந்து பின்னடைவு

## கோட்டையைக் கைப்பற்றிய லிபியப் படைகள்

(டிரிபோலி)

ஐ.எஸ். தீவிரவாதிகளிட மிருந்து முக்கிய நகரமான சிர்ட்டேயில் உள்ள கோட் டையை லிபியாவின் ஐக் கிய அரச படைகள் கைப் பற்றியுள்ளன.

லிபியாவில் 1969ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரை 42 ஆண்டு காலம். கடாபியின் ஆட்சிக்காலம் ஆகும். அவர் 2011 ஆம் ஆண்டு வீழ்ந்த பின்னர் அங்கு பல்வேறு தீவிரவாதக் குழுக்கள் ஆயு தம் தாங்கி போரிட்டு வரு கின்றன.

அந்த குழுக்களில்ஐ.எஸ். தீவிரவாதிகள் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

லிபியாவில் ஐ.எஸ்.தீவிர வாதிகள் 5 ஆயிரம் பேர் இருப்பதாக வெளிநாட்டு உளவு அமைப்புகள் கணித் துள்ளன. ஆனால் அங்குள்ள முக்கிய நகரான சிர்ட்டே நக ரில் மட்டும் எவ்வளவு தீவிர வாதிகள் இருக்கிறார்கள் என்பது கணிக்கப்படவில்லை.



**பலத்த சண்டை**

கடாபியின் பிறந்த நகரமான சிர்ட்டே, ஐ.எஸ்.தீவிரவாதிக ளின் கோட்டையாக திகழ்ந்து வந்தது. அதிலும் ஈராக், சிரியா நாடுகளுக்கு வெளியே ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு கோட்டை யாக திகழ்ந்து ஆன்ம பலம் தந்தது சிர்ட்டேதான்.

இந்த சிர்ட்டேயை கைப் பற்றுவதற்கு லிபியாவின் ஐக் கிய அரச படைகள் கங்கணம் கட்டிக்கொண்டு, ஐ.எஸ். தீவிர வாதிகளுடன் கடந்த பல நாட்க ளாக தீவிரமாக போரிட்டு போட்டு வந்தன.

**கோட்டை வசமானது**

இந்த நிலையில் சிர்ட்டே கோட்டையை லிபியாவின் ஐக்கிய அரசு படைகள் நேற்று முன்தினம் கைப் பற்றி விட் டதாக அறிவித்துள் ளன. இது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு பலத்த பின்னடைவை ஏற்ப டுத்தியுள்ளது.

மேலும், அந்த நகரில் உள்ள குடியிருப்பு பகுதி ஒன் றையும் ஐ.எஸ்.தீவிரவாதி களிடம் இருந்து அந்த படை கள் மீட்டு விட்டன.

**குண்டு, ஏவுகணை வீச்சு**

இந்த வெற்றி குறித்து கருத்து தெரிவித்த லிபிய அரசு அதிகாரி ஒருவர், "நாங் கள் நினைத்த அளவுக்கு இந்த போர் கடினமானதாக அமைந்து விடவில்லை" என தெரிவித்தார்.

மற்றொரு அதிகாரி கூறு கையில், "சிர்ட்டேயில் ஐ.எஸ. தீவிரவாதிகளின் நிலைகள் மீது போர் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின. கடற் படைகள், கோட்டைக்குள் ஏவுகணைகளை சரமாரி யாக வீசின" என்றார்.

கடாபி ஆட்சிக்காலத்தில் சர்வதேச மாநாடுகள் நடத் தப்பட்ட கட்டடத்தை சுற்றி லும் நின்றிருந்த ஐ.எஸ். தீவிரவாதிகளை எதிர்த்து லிபியாவின் ஐக்கிய அரச படைகள் கடும் போரிட்டதாக அங்கிருந்து வரும் மற்றொரு தகவல் கூறுகிறது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் தளபதிகள் சிர்ட்டே கோட் டையை விட்டு, தெற்கு பகுதி யில் உள்ள பாலைவனத்துக் குள் சென்று விட்டார்கள் என்று ஐ.நா. ஆதரவு பெற்ற ஐக்கிய அரசுபடைகளின்செய்தி தொடர் பாளர் ஜெனரல் முகமது அல் குஸ்ரி தெரிவித்தார். (இ-5)

## நான்கு பெண்களின் கழுத்து துண்டிப்பு

(மைடுகுரி)

நைஜீரியாவில் 4 பெண் கள் போகோஹராம் தீவிர வாதிகளால் கழுத்து துண் டிக்கப்பட்டு கொலை செய்யப் பட்டுள்ளனர்.

நைஜீரியாவில் ஒரு குறிப் பிட்ட அரசை உருவாக்க வலியுறுத்தி போகோஹாரம் தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக சிறுமிகளையும், பெண்களை யும் அவர்கள் கடத்துவதோடு, இராணுவம் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார் கள். தீவிரவாதிகளை ஒடுக் கும் நடவடிக்கையில் நைஜீ ரிய இராணுவத்துடன் அயல் நாடுகளான நைஜர், கேம ரூன் நாடுகளின் இராணு வமும் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் வடகிழக்கு நைஜீரியாவில் வீடுபுகுந்து 4 பெண்களின் கழுத்தை துண் டித்து போகோஹராம் தீவிர வாதிகள் படுகொலை செய் துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியாவின் வட-கிழக்கு பகுதியில்அமைந்துள்ள மைராரி கிராமத்தில் 7 மோட்டார் சைக்கிள்களில் புகுந்த 14 போகோஹராம் தீவிரவாதி கள், வீடுகளுக்குள் நுழைந்து நான்கு பெண்களை கழுத்தை துண்டித்து கொலை செய்துள் ளனர். படுகொலை செய்யப் பட்ட பெண்கள் அனைவரும் 27இல் இருந்து 45 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று கண் காணிப்பு குழு தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. ரமழான் நோன்பு துறக்கும் வேளை யில் வீடுபுகுந்து போகோ ஹராம் தீவிரவாதிகள் இந்த படுகொலையை நடத்தி உள் ளனர் என்று பொலிஸ் தரப் பில் தெரிவிக்கப்பட்டு உள் ளது. (இ-5)

## போராளிக் குழுக்களைத் தேடி பங்களாதேஷில் தீவிர வேட்டை

பங்களாதேசத்தில் கடந்த சில நாட்களாக சிறுபான்மை யினர் படுகொலை செய்யப் பட்டு வருவது உலகளவில் பெரும் அதிர்வுகளை ஏற்ப டுத்தி வருகிறது.

இந்த கொலைகளை போரா ளிகள் குழுக்களை சேர்ந்த வர்கள்தான் நடத்தி இருப்பார் கள் என நம்பப்படுகிறது.

இதன்காரணமாக போரா ளிகள் குழுக்கள் குறிப்பாக தடை செய்யப்பட்ட போராளி கள் குழுக்களுக்கு எதிராக அந்த நாட்டின் பிரதமர் ஷேக் ஹசினா தீவிர நடவடிக்கை எடுக்க முடிவு செய்து அறிவித்தார.

இதன் ஒரு அங்கமாக அங்கு போராளி குழுக்களை தேடும் வேட்டை தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. இதில் 1,740 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

1,600 பேர் கடந்த வெள் ளிக்கிழமை ஒரே நாளில் கைது செய்யப்பட்டனர். 140 பேர் நேற்று முன்தினம் ஒரே நாளில் கைதாகினர். (இ-5)



# சிறுவர் அரங்கம்

1459

..."அந்த நாயை மீண்டும் இங்கே கொண்டுவா!" என்றார் அமைச்சர்.


அவனும் நாயுடன் அங்கே வந்தான். படுத்து இருந்த யானை தன் நண்பனைப் பார்த்ததும் எழுந்தது. அந்த நாய் வாலை ஆட்டியபடியே யானையின் அருகே ஓடியது. மகிழ்ச்சியாகக் குரைத்தது. யானை அதைத் தன் துதிக்கையால் தடவிக் கொடுத்தது.

உணர்ச்சி மிகுந்த இந்தக் காட்சியைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந்தார் அமைச்சர். விலங்குகளுக்குள் இப்படி ஒரு நட்பா என்று வியப்பு அடைந்தார். அரசனைச் சந்தித்த அவர் நடந்ததை எல்லாம் சொன்னார்.

"சில நாட்களில் பட்டத்து யானை பழைய

யானை உண்ட போது சிந்திய உணவை அது பரபரப்புடன் உண்டது. இதைப் பார்த்து இரக்கப்பட்ட யானை அதற்கு நிறைய உணவைத் தந்தது. அதுவும் மகிழ்ச்சியுடன் உணடது. அதன் பிறகு அது நாள்தோறும் அங்கே வரத் தொடங்கியது. யானையும் தன் உணவை அதற்குத் தந்தது.

நாளாக நாளாக அவை இரண்டும் நெருங்கிய நண்பர்கள் ஆயின. எப்போதும் இணை பிரியாமல் இருந்தன. நாள்தோறும் நிறைய உணவு உண்டதால் அந்த நாய் கொழுத்துப் பருத்தது. அழகாகக் காட்சி அளித்தது. அங்கே வந்த செல்வர் ஒருவர் அந்த நாயைப் பார்த்தார். அதைத் தன் வீட்டில் வளர்க்க விரும்பினார்.



# பட்டத்து யானை

நிலையை அடைந்து விடும்!" என்றார். அவர் சொன்னது போலவே அந்த யானையும் பழைய பெருமித நிலையை அடைந்தது.

முன்னொரு காலத்தில் மகத நாட்டு அரண்மனையில் பட்டத்து யானை ஒன்று இருந்தது. அதன் மீது அமர்ந்து செல்வதைப் பெருமையாக நினைத்தான் அரசன். அதற்கு எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டான். அரண்மனை லாயத்தில் அந்த யானை உண்டு கொண்டிருந்தது. பசியால் வாடிய நாய் ஒன்று அங்கே வந்தது. எலும்பும், தோலுமாகப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது அது.

பாகனிடம் அவர், "இந்த நாய்க்கு விலையாக நூறு பணம் தருகிறேன்!" என்றார்.

பணத்தாசை கொண்ட அவன் அந்த நாயை அவரிடம் விற்று விட்டான். தன் நண்பனை நினைத்து அந்த யானை உணவு உண்ண வில்லை. எப்போதும் கண்ணீர் வடித்தபடியே இருந்தது. அதை அறிந்த அரசன் அரண்மனை மருத்துவர்களை அனுப்பி யானையை சோதிக்கச் சொன்னான். பட்டத்து யானையைச் சோதித்த அவர்கள் அரசனிடம் வந்தனர்.

"அரசே! பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை. அது ஏன் உணவு உண்ண வில்லை? கண்ண்ணீர் வடிக்கிறது என்பது புரியவில்லை!" என்றனர்.

என்ன செய்வது என்று குழம்பிய அரசன் அமைச்சரை அழைத்தான். "பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை என்று மருத்துவர்கள் சொல்கின்றனர். நீங்கள்தான் எப்படியாவது அதைக் குணப்படுத்த வேண்டும்!" என்றான்.

அறிவு நிறைந்த அந்த அமைச்சர் லாயத்திற்கு வந்தார். உடல் மெலிந்து கண்ணீர் வடித்தபடி இருந்த யானையைப் பார்த்தார். அதன் முன் வைக்கப்பட்டு இருந்த சுவையான உணவு வகைகள் அப்படியே இருந்தன. 'இந்த யானைக்கு ஏதோ துன்பம் நிகழ்ந்து உள்ளது. கண்டிப்பாக அது பாகனுக்குத் தெரிந்து இருக்கும்,' என்று நினைத்தார் அவர்.

பாகனை அழைத்த அவர், "அண்மையில் இந்த யானையைத் துன்பப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நடந்துள்ளது. அது உனக்குத் தெரிந்து இருக்கும். அது என்ன என்ற உண்மையைச் சொன்னால் நீ உயிர் பிழைப்பாய்," என்று மிரட்டினார்.

வேறு வழியில்லாத அவன், "இங்கே கொழு கொழுவென்று நாய் ஒன்று இருந்தது. அது வும் இந்த யானையும் எப்போ தும் ஒன்றாகவே இருந் தன. அந்த நாயைச் செல்வ ந்தர் ஒருவர் விலைக்குக் கேட்டார். நானும் விற்று விட்டேன். அன்றிலிருந்து இந்த யானை எதையும் உண்பது இல்லை. கண்ணீர் வடித்தபடி உள்ளது!" என்றான்.

"அந்த நாயை மீண்டும் இங்கே கொண்டு வா!" என்றார் அமைச்சர்.

அவனும் நாயுடன் அங்கே வந்தான். படுத்து இருந்த யானை தன் நண்பனைப் பார்த்ததும் எழுந்தது. அந்த நாய் வாலை ஆட்டியபடியே யானையின் அருகே ஓடியது. மகிழ்ச்சியாகக் குரைத்தது. யானை அதைத் தன் துதிக்கையால் தடவிக் கொடுத்தது.

உணர்ச்சி மிகுந்த இந்தக் காட்சியைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந்தார் அமைச்சர். விலங்குகளுக்குள் இப்படி ஒரு நட்பா என்று வியப்பு அடைந்தார். அரசனைச் சந்தித்த அவர் நடந்ததை எல்லாம் சொன்னார்.

"சில நாட்களில் பட்டத்து யானை பழைய நிலையை அடைந்து விடும்!" என்றார். அவர் சொன்னது போலவே அந்த யானையும் பழைய பெருமித நிலையை அடைந்தது.

(முற்றும்)

## 06.2016 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1871 - லாப்ரடோரில் சூறாவளி தாக்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1881 - ஜெனட் என்ற அமெரிக்கக் கப்பல் ஆர்க்டிக் பெருங்கடலில் மூழ்கியது.
- 1886 - பிரித்தானியக் கொலம்பியாவின் வான்கூவர் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் சேதமடைந்தது.
- 1886 - பாவாரியாப் பேரரசன் இரண்டாம் லுட்விக் மியூனிக்கின் ஸ்டார்ன்பேர்க் ஆற்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டான்.
- 1917 - முதலாம் உலகப் போர்: லண்டன் நகர் மீது ஜெர்மனியப் போர் விமானங்கள் தாக்கியதில் 46 குழந்தைகள் உட்பட 162 பேர் கொல்லப்பட்டனர்.
- 1925 - சார்ல்ஸ் ஜென்கின்ஸ் படங்களையும் ஒலியையும் ஒரே நேரத்தில் அனுப்பும் முறையை முதன்முறையாக வெற்றிகரமாகப் பரிசோதித்தார். 10-நிமிட அசையும் படதை 5 மைல்கள் தூரத்திற்கு அனுப்பினார்.
- 1934 - ஹிட்லரும் முசோலினியும் வெனிசில் சந்தித்தனர்.
- 1948 - ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங கமான தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 - மலாயா தொழிற்சங்கங்களின் சம்மேளனம் மலேசியாவில் தடை செய்யப்பட்டது.
- 1952 - சோவியத்தின் மிக்-15 போர் விமானம் சுவீடனின் டிசி-3 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது.
- 1955 - சோவியத் ஒன்றியத்தில் முதலாவது வைரச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1978 - இஸ்ரேலின் பாதுகாப்புப் படையினர் லெபனானை விட்டு விலகினர்.
- 1983 - பயனியர் 10 சூரியக் குடும்பத்தைத் தாண்டிய முதலாவது விண்கப்பல் ஆனது.
- 2006 - நியூ ஹரைசன்ஸ் தனது பயண வழியில் 101,867 கிமீ தூரத்தில் 132524 யீடு என்ற சிறுகோளை சந்தித்து அதன் படத்தைப் பூமிக்கு அனுப்பியது.
- 2007 - திருகோணமலையில் மேர்சி கோப்ஸ் என்னும் பன்னாட்டுத் தன்னார்வல அமைபபின் பிலிப்பீன்ஸ் பணியாளர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டார்.

**பிறப்புகள்**

- 1831 - ஜேம்ஸ் மாக்ஸ்வெல், ஸ்கொட்லாந்து இயற்பியலாளர். (இ. 1879)
- 1897 - ஜெப்ரி ஃபார்ன்பீல்ட் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டக்காரர். (இ. 1974)
- **1933 - யாழ்வாணன், ஈழத்து எழுத்தாளர் . (இ. 1996)**
- 1944- பான் கி மூன், ஐக்கிய நாடுகள் அவை யின் எட்டாவது பொதுச் செயலாளர்.
- 1966 - கிரிகோரி பெரல்மான், ரஷ்யக் கணிதவியலாளர்.
- 1969 - சார்ல்ஸ் ஃபோர்வார்ட் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டக்காரர்.
- 1987 - ஜி. வி. பிரகாஷ் குமார், தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்.

**இறப்புகள**

- 1972 - கியோர்க் வொன் பெக்கெசி, நோபல் பரிசு பெற்றவர். (பி. 1899)
- 2012 - மெஹ்தி ஹசன் ஓர் பாக்கித்தானிய கசல் பாடகரும் முன்னாள் லாலிவுட் திரைப்பட பின்னணிப் பாடகர். (பி. 1927)

## யாழ்வாணன்



யாழ்வாணன் ஈழத்தின் புகழ் பெற்ற சிறுகதையாசிரியர். சண்முகநாதன் நாகலிங்கம் என்பது இவரது இயற்பெயர். யாழ்ப்பாண மாநகர சபை அலுவலகத்தில், நகர மண்டபக் காப்பாளராக கடமையாற்றினார். இவர், முருகேசு நாகலிங்கம் - செல்லையா லட்சுமி ராஜாமணி அம்மாள் ஆகியோருக்கு மகனாக அனுராதபுரத்தில் பிறந்தார். இவர் மனைவி பெயர் தபோநிதி மகன்கள்,யாழ் சுதாகர், சுரதா யாழ்வாணன், சுரேஷ் யாழ்வாணன் மற்றும் கண்ணதாசன் யாழ்வாணன் மகள், யாழினி: ஈழத்து இலக்கிய உலகில் யாழ்வாணன் என்ற பெயர் நன்கு புகழ் பெற்றது. நகர மண்டபக் காப்பாளராக அவர் கடமையாற்றியவர். யாழ் இலக்கிய வட்டத்தை உருவாக்கியவர்களுள் யாழ்வாணனும் ஒருவர். தொடக்க காலத்திலிருந்தே அதன் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார். யாழ் இலக்கிய வட்டத்தின் வளர்ச்சிக்கான காரணங்களுள் அவரது அயராத அடக்கமான உழைப்பு மிகவும் முக்கியமானதொன்று. 1968ஆம் ஆண்டு நடைபெற்ற சுகாதார - குடி நல வார விழாக் குழுவின் செயலாளராக் கடமையற்றியதுடன் எழில்மிகு யாழ்ப்பாணம் என்ற வாடா மலரையும் வெளியிட்டு அறிஞர் பெருமக்களின் பாராட்டுதல்களையும் அவர் பெற்றுள்ளார். அண்ணா அஞ்சலி அவரது மற்றுமோர் தொகுப்பு நூலாகும். கடனுதவிச் சிக்கனச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார். இலக்கிய விழாக்கள், நாடக - நடன விழாக்கள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை செம்மையாக ஒழுங்கு செய்து சிறப்பாக நடத்தி முடிக்கும் யாழ்வாணனின் மந்திர சக்தியையும் பலர் அறிவர். சிறந்த சிறுகதையாசிரியராக யாழ்வாணன் பல பரிசுகளைப் பெற்ற எழுத்தாளர். பரந்த சமூக சேவையாளரான யாழ்வாணன் நிறைந்த நல்லியல்புகளைக் கொண்ட பண்பாளர். 1987ஆம் ஆண்டு அவர் தனது பணியில் இருந்து ஓய்வு பெற்று சென்னைக்கு இடம் பெயர்ந்தார். ஒக்டோபர் 5, 1996 ஆம் ஆண்டு மார்படைப்பால் காலமானார்.

# சாலாவ வெடி விபத்தினால் ரூ.500 கோடிக்கு மேல் இழப்பு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

கொஸ்கம-சாலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில், அண்மையில் இடம்பெற்ற வெடிவிபத்தினால், இலங்கை இராணுவத்துக்கு, 500 கோடி ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட இழப்பு ஏற்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இனிமேல், அந்தப் பகுதியில் ஆயுதக் கிடங்குகள் அமைக்கப்படாது என்றும், எஞ்சியுள்ள ஆயுதங்கள், வெடிபொருட்கள் சன அடர்த்தி குறைந்த பகுதிகளுக்கு மாற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.


'தேவைக்கு அதிகமாக இருந்த பெருந்தொகையான ஆட்லறி, பல்குழல் பீரங்கிக் குண்டுகள் அழிந்து போனவற்றுள் அடங்கியுள்ளன. இவை வழங்குநரிடமே திருப்பி விற்கப்படவிருந்தவை.

நான் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், பெருமளவில், பயன்படுத்தப்படாத வெடிபொருட்கள் இருந்ததைக் கண்டேன். காலாவதியாக முன்னர், அவற்றை அகற்றி விட்டு, தேசிய பாதுகாப்புக்குத் தேவையான குறைந்தளவு வெடிபொருட்களை மாத்திரம் கொள்வனவு செய்து கையிருப்பில் வைத்துக் கொள்ளலாம் எனறு பரிந்துரைத்தேன்.

மிகுதியாக உள்ள வெடிபொருட்களை வாங்கிய விலையை விடவும் குறைந்த விலைக்கு மீள் விற்பனை செய்வதற்கு கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# மைத்திரி-மகிந்த சமாதான பேச்சுவார்த்தை தோல்வி





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், கட்சியின் மத்திய செயற்குழு எடுக்கும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளும் வரையில் அவர்களுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்துவதில்லை என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஞாயிறு பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானங்களை மீறும் வகையில் அண்மைய நாட்களில் இவர்கள் செயற்பட்டுள்ளனர்.

கட்சிக்குள் சமாதானமின்மையை தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளனர். இதன் காரணமாக இவ்வாறான ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மீளவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமாயின், கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவை ஏற்றுக்கொள்ள வேண்டும்

மேலும் கட்சி உத்தியோகபுர்வமாக எடுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்பட வேண்டும்.

எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரின் செயற்பாடுகள் கட்சியின் பயணத்திற்கும், நன்மதிப்பிற்கும் பெரும் தடையாக அமைந்துள்ளது.

மே தினக் கூட்டத்திலும் பங்கேற்காத இவர்கள் கட்சியின் ஒழுக்க விதிகளை பல தடவைகள் மீறிச் செயற்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# அரசு உண்மையை சொல்வதாலேயே பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது

## அமைச்சர் ஹரின் ஆதங்கம்



உண்மையைச் சொல்வதனால்தான் இந்த அரசாங்கம் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அமைச்சர்களுக்கான வாகன இறக்குமதி குறித்து அமைச்சர் ஹரின் விளக்கம் அளித்துள்ளார். அவர் தொடர்ந்தும் விளக்கம் அளிக்கையில்,

அமைச்சர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்வது குறித்து சமூகத்தில் பிழையான செய்திகள் பரப்பப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் வாகனங்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைநிறுத்தியமை வரவேற்கப்பட வேண்டியதாகும்.

குறை நிரப்புப் பிரேரணையின் ஊடாக எனக்கும் வாகனம் கொள்வனவு செய்யப்பட உள்ளதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையற்றது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இரகசியமான முறையில் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அமைச்சர்களுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுவது குறித்து நாடாளுமன்றுக்கும் மக்களுக்கும் இந்த அரசாங்கம் அறிவித்தது.

அரசாங்கம் உண்மைகளை வெளிப்படுத்துவதனால் விமர்சனங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் பற்றி எவருக்கும் தெரியாது. அந்த தகவல்கள் மூடிமறைக்கப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### பொறுப்புடன் பதில் சொல்வதுண்டா?

முத்து நல்லியப்பன் இருக்காரா? இல்லீங்க . எப்ப வருவாரு? தெரியாது. ஏதாவது சொல்லிட்டுப் போனாரா? இல்லை.

இப்படிப்பொறுப்பில்லாமல்பதில்சொல்லி போனைப் பொத்தென்று போட்டும், கதவைப்பட்டென்று சாத்தியும் மனத்தைச் சங்கடப்படுத்தும் கும்பலில் நாமும் ஒருவராய் இருக்கக் கூடாது.

கடைத் தெருவுக்குப் போய் இருக்கிறார்; இந்த வாரத்தில் வருவார் – வரக் கூடும் ; நீங்கள் யாரென்று அவர் கேட்டால் என்ன சொல்ல.விடயம் ஏதும் சொல்ல வேண்டுமா? நீங்களே திரும்பவும் தொடர்பு கொள்கிறீர்களா அல்லது அவரைத் தொடர்பு கொள்ளச் சொல்லட்டுமா? நான் இன்னார்; வந்ததும் விடயத்தைச் சொல்கிறேன். என்றெல்லாம் பொறுப்புடன் பேசுவதும் நடந்து கொள்வதும் மற்றவர்களிடம் நம்மைப் பற்றி உயர்வான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதுடன் மனிதாபிமானம் உள்ள செய்கையும் ஆகும்.அது மட்டுமா? அன்று நான் வந்தேன் அல்லது போன் செய்தேன். இன்னார் இருந்தார்கள்.மிக அன்பாக உபசரித்தார்கள். பொறுப்புடன் பதில் சொன்னார்கள் என்றெல்லாம் அந்த நபர் நம்மைப் பற்றி உயர்வாகச் சொல்வார்.இது நம்மை நெருங்கி வாழ்பவர்களிடம் ஈடுபாட்டை நிச்சயம் அதிகப்படுத்தும். யாரோ ஒருத்தர் வந்தார். ஏதோ கேட்டார். பெயர் என்னவோ சொன்னார். உங்களைக் கேட்டார். இல்லையென்று சொல்லி விட்டேன். போய்விட்டார் என்று பொறுப்பற்றுப் பேசுபவர்களின் கும்பலிலும் நாம் ஒருவராய் இருக்கக் கூடாது.

எத்தனை மணிக்கு வந்தார்? தோற்றத்தில் எப்படி இருந்தார்?எத்தகைய மன நிலையுடன் காணப்பட்டார்? பெயர் என்ன? விலாசமென்ன? விடயம் ஏதும் சொன்னாரா? ஏதும் கொடுத்தாரா?ஆகிய எந்தக் கேள்விக்கும் தெரியாது என்ற பொறுப் பற்ற பதிலைச் சொல்லும் நிலையிலும் நாம் இருக்கக் கூடாது.

ஒருவிதத்தில் சொல்லப் போனால், தேடி வந்தோரை நாம் சந்திக்க முடியாமல் போய்விட்டதே என்ற வருத்தம் வேண்டுமானால் நம்மவர்களுக்கு வரலாமே தவிர , எதற்கு வந்தாரோ சரியாகக் கவனிக்கவில்லையே?பொறுப்புடன் நம் வீட்டில் பதில் சொல்லவில்லையே! என்பதான வருத்தங்கள் நம்மவர்களுக்கு எழாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

அதே போல் , நாம் தேடிவந்தவர்கள் வீட்டில் இல்லையே தவிர நாம் வந்த விடயம் அல்லது சொன்ன விடயம் அல்லது கொடுத்த பொருள் நிச்சயம் அவரைச் சென்றடைந்து விடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும் வகையில் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

சந்திக்க வேண்டிய இருவருள் ஒருவர் , நடுவில் நாம் இடையே தலையிடுவதையும் அல்லது அவர்களது சந்திப்பிற்கான காரணத்தைத் தெரிந்து கொள்வதையும் விரும்பாமல் போகலாம். அத்தகையவர்களிடம் எழுதிக் கொடுத்துவிங்கள் என்று கேட்டு வாங்கி கவரை ஒட்டி வாங்கிக் கொள்ளலாம்.அவர் தராத பட்சத்தில் தரவில்லை என்பதனையேனும் சொல்லி வைக்கலாம்.

பொறுப்புடன் பதில் சொல்லாதவர்களாகக் குடும்ப உறுப்பினர்களும், வீட்டில் அலுவலகத்தில் வேலை செய்பவர்களும் அமைந்துவிட்டால் ஒருவர் கெட்ட பெயர் சம்பாதிக்க வேறு காரணமே வேண்டாம்.


உறவு பலவீனப்பட்டு, நல்லவாய்ப்புக்களை நழுவவிட்டு நட்டங்கள் பல அடைந்து அவப் பெயரைச் சுமந்து திரிய ஒருவரைச் சுற்றியிருக்கும் பொறுப்பற்ற மனிதர்கள் போதும்.

இருவரது சந்திப்பிற்கிடையே நாம் ஏன் இவ்வளவு பொறுப்புடன் பதில் சொல்ல வேண்டும்?

மற்றவர்கள் நம்மைப் பொறுத்த வரை இப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோமே, அது ஒன்று போதாதா?

லேனா தமிழ்வாணன்

## நாவற்குழி புனித அந்தோனியார் ஆலய பெருவிழா நாளை ஆரம்பம்



யாழ்ப்பாணம் நாவற்குழி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நாளை செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 ஆம் திகதி வரை திருவிழா நடை பெறவுள்ளது.

இத் திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 5 மணிக்கு நவநாள் வழிபாடும் இடம் பெறும். தொடர்ந்து 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.

19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலி யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம் பெறும். தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் புனிதரின் ஆசிர்வாத நிகழ்வும் இடம் பெறும். (இ-5)

## இந்து கோவில்களில் தாக்குதல்



(கோலாலம்பூர்)

மலேஷியாவில், மீண்டும், இந்து கோவில்களில் நேற்று முன் தினம் தாக்குதல் நடைபெற்றதால், பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தென் கிழக்கு ஆசிய நாடான மலேஷியாவில், ஏராளமான தமிழர்கள் வசித்து வருகின்றனர். நாட்டின் மக்கள் தொகையான, 2.8 கோடி பேரில், 8 சதவீதம் பேர் இந்தியர்கள். அங்கு, ஏராளமான இந்து கோவில்கள் உள்ளன.

மலேஷியாவில் பினாங்கு மாகாணத்தில், சில தினங்களுக்கு முன், முத்து மாரியம்மன் கோவிலில் நுழைந்த கும்பல், சுவாமி சிலைகளை கடுமையாக சேதப்படுத்தி விட்டு தப்பியோடி விட்டது.

இந்நிலையில், அந்த கோவிலில் இருந்து, 1 கிலோமற்றர் தொலைவில் உள்ள முனீஸ்வரர் கோவிலில் சுவாமி சிலைகள் சேதப் படுத்தப்பட்டுள்ளன. அடுத்தடுத்து, கோவில்களில் சுவாமி சிலைகள் உடைக்கப்படும் சம்பவம், அங்குள்ள தமிழர்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 160-200 | 300 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 85 | 220 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 1000 | 800 | 800 |
| தக்காளி | 230 | 100 | 220 | 300 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 70 | 100 | 100 | 70 |
| கோவா | 180 | 130 | 200 | 200 | 200 | 180 |
| கரட் | 200 | 150 | 200-400 | 400 | 400 | 180 |
| பூசணி | 60 | 70 | 80 | 100 | 100 | 70 |
| புடோல் | 100 | 110 | 60 | 150 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 100 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 160 | 200 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 80 | 120 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 200 | 350 | 400 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 120 | 200 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 200 | 160 | 120 |
| பயற்றங்காய் | 150 | 220 | 100 | 200 | 120 | 200 |
| லீக்ஸ் | 230 | 100 | 220 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | — | 200 | 200 | 150 |
| கறிமிளகாய் | 250 | 260 | 300 | 400 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 400 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 400 | 240 | 180 |
| கத்தரிதம்புள்ள | 180 | 140 | 260 | 200 | 200 | — |
| கீரை - 1பிடி | 40 | 25 | 50 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 250 | 200 | 280 | 400 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-25 | 40 | 50 | 20-60 | 40 |
| இராசவள்ளி | 130 | 120 | — | 300 | 240 | 160 |
| வெங்காயப்பூ | 250 | — | 150 | 300 | — | — |
| முள்ளங்கி | 80 | — | 120 | 100 | 160 | — |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 50 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | — | 80 | 120 | 80 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பிரபாகரனுடன் ரணில் விக்கிரமசிங்க புதிய ஒப்பந்தம் 203

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் புதிய உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக அரசுடன் பேச்சு வார்தை நடத்த வேண்டி விடுதலை புலிகள் இயக்கம் ஒரு மாத போர் நிறுத்தம் செய்வதாக அறிவித்தது. இந்த போர் நிறுத்தம் 24-12-2001 நள்ளிரவு அமுலுக்கு வந்தது

இதுபோல விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 1 மாதம் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது

### பொருளாதார தடை நீக்கம்

இப்படி ஓர் இணக்கமான சூழ்நிலை ஏற்பட்டதை தொடர்ந்து நோர்வே தூதுகுழுவின் உதவியுடன் விடுதலை புலிகளுடன் மீண்டும் சமரச பேச்சைத் தொடங்குவதற்கான முயற்சியை பிரதம் ரணில் விக்கிரமசிங்க தொடங்கினார்

இதற்கு வசதியாக வடக்கு பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி பகுதியில் கடந்த ஏழு ஆண்டுகளாக அமுலில் இருந்து வரும் பொருளாதாரத் தடையை அரசு நீக்கியது. அனுமதி அட்டை இல்லாத ஆயுதங்கள் வெடி பொருட்கள் பைனாகுலர்கள் உள்ளிட்ட 6 வகையான பொருட்கள் தவிர மற்ற பொருட்கள் பகுதிக்கு கொண்டு செல்வதற்கான தடை அகற்ற படுவதாக 15-01-2002 அன்று அறிவித்தது

### மீண்டும் நிபந்தனை

இந்த நிலையில் எங்கள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் மீண்டும் நிபந்தனை விதித்தனர்.

இது குறித்து விடுதலை புலிகள் இயக்க அரசியல் பிரிவு தலைவர் எஸ்.பி. தமிழ்ச் செல்வன் நிருபர்களிடம் கூறியதாவது,

அரசுடன் விடுதலைப் புலிகள் நேரடியாக நடை பெறும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள எங்கள் மிதான தடையை நீக்குவது அவசியமான ஒன்றாகும்.

தடையை நீக்காத நிலையில் நாங்கள் பேச்சுவார்த்தையில் இடம் பெறுவதில் அர்த்தம் இல்லை. எனவே உங்கள் மீதான தடையை புதிய அரசு நீக்கும் என்று நம்புகிறோம்.

அரசின் நடவடிக்கை எங்களுக்கு திருப்தி அளிக்கிறது. சமரச முயற்சி ஏற்பட அரசு தொடர்ந்து ஈடுபடும் என்று நம்புகின்றோம்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமைதியான சூழ்நிலை ஏற்பட்ட பிறகே நேரடி பேச்சுவார்த்தை நடைபெறும்.

இவ்வாறு எஸ்.பி.தமிழ்ச் செல்வன் கூறினார்.

நோர்வே தூது குழுவினர் லண்டனில் இருந்த விடுதலை புலிகள் அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்தை சந்தித்து பேசினார். பேச்சுவார்த்தை 3 மணி நேரம் நடந்தது.

நோர்வே தரப்பில் நோர்வே வெளியுறவு துணை அமைச்சர் விடர் கெல்கிசன் வெளியுறவு இலாகா சிறப்பு ஆலோசகர் எரிக் சோல்கிம் இலங்கைக்கான நோர்வே தூதர் யான் வெஸ்ட் போர்க் ஆகியோர் இடம் பெற்றனர்.

### தூது குழு வருகை

இந்த நிலையில் நோர்வே நாட்டு துதர் குழுவினர் நோர்வே வெளியுறவு துணை அமைச்சர் விதர் கெர்கிசன் தலைமையில் கொழும்பு வந்து சேர்ந்தனர் . சிறப்பு சமாதான தூதர் எரிக் சோல்கிம் இந்த குழுவில் இடம் பெற்றிருந்தார் இவர்கள் இருவரும் லண்டனில் விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சு வார்த்தை குறித்தும் தற்போதைய முன்னேற்றம் பற்றியும் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேக்சு நடாத்தினார்கள். இதன் பின்னர் நிரந்தர போர் நிறுத்த உடன்பாடு ஒன்றை தயாரித்தனர்.

### பிராபாகரன் கை எழுத்து

இந்தப் புதிய உடன்பாட்டை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏற்றுக் கொண்டன. இரு தரப்பினரும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

அரசு சார்பாகப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் விடுதலைப்புலிகள் சார்பாகப் பிரபாகரனும் இந்த ஒப்பந்தத்தில் 22.02.2002 அன்று கையெழுத்திட்டார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவுக்கு விக்கிரமசிங்க சென்று உடன்பாட்டில் கையெழுத்திட்டார்.

பிரபாகரன் கையெழுத்துப் போட்ட பத்திரத்தைக் கிளிநொச்சியில் நடந்த நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் எஸ்.பி.தமிழ்ச் செல்வன், நோர்வே தூதுக் குழுவிடம் வழங்கினார்.

1994 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நிரந்தரப் போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பது இதுவே முதல் முறை ஆகும்.


### விக்கிரமசிங்க


உடன்பாட்டு கடிதத்தை நோர்வே தூதரிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இராணுவ அமைச்சர் திலக் மாரப்பனையும் ஹெலி கொப்டரில் வவுனியா சென்றனர்.





(தொடரும்)




யாழ்ப்பாணம் - சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் சின்மய பிறந்த நூற்றாண்டு விழா கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி வெகு விமரிசையாக இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ. நடராஜனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனும் கலந்து கொண்டனர். மேலும், இந்நிகழ்வில் சமயத் துறவியர்கள், குருமார்கள், சமயப் பெரியார்கள், துறைசார் பெரியார்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். பிரம்மப் பிரார்த்தனையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் ஆசியு ரைகள், நூற்றாண்டு விழா மலர் வெளியீடு, இசை ஆராதனை, வில்லுப்பாட்டு, தனிநடனம், பேச்சு, வாத்திய இசைச் சங்கமம், பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெற்றன.

# ஆஸி சென்ற இலங்கையர்கள் இந்தோனேசியாவில் நிர்க்கதி

(கொழும்பு)

இலங்கை அகதிகள் 40 பேர் இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலத்தில் அநாதரவாகியுள்ளதாக தெரியவருகிறது. இவர்கள் பயணித்த படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக விபத்துக்கு உள்ளானதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக இந்தோனேசிய தகவல்கள் தெரிவக்கின்றன.

இவர்கள் சட்டவிரோத மான முறையில் அவுஸ்திரே லியாவுக்கு செல்லவிருந்த தாக ஆச்சே மாநிலத்தின் லோக்னா மாவட்ட இரா ணுவ பிரதான அதிகாரி மேஜர் தருல் அமீன் தெரி வித்துள்ளார்.

டி.என்.1எப்.வீ-00455.09 என்ற இலக்கத்தை கொண்ட இந்த படகு, 17 மீற்றர் நீள மும் 5 மீற்றர் அகலமும் கொண்டது என அவர் கூறி யுள்ளார். படகில் வந்தவர்க ளின் உடல் நிலை சீராக இரு ப்பதாகவும் அகதிகளில் பெண களும் சிறுவர்களும் இருப்பதா கவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (இ-5)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 750


தனுசியா




சசி




சந்திரன் சிந்து



மிதுளா

அரச அலுவலகத்தில் இருந்து ஒரு பென்சனியருக்கு வந்த கடிதம் உயிரோடு இருப்பதற்கான சான்றிதழை முன்பு 2012 வரை சமர்ப்பித்திருந்த தாங்கள் தற்போது 2015 இற்கும் தந்துள்ளீர்கள். இடைப்பட்ட ஆண்டுகளான 2013, 2014 இலில் தாங்கள் உயிருடன் இருந்தமைக்கான சான்றிதழை உடன் சமர்ப்பிக்கவும்.

ராஜ்




சர்மி சர்மி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோத்தாவின் நுழைவும் கொஸ்கம பேரழிவும்

தாஜுடீனின் படுகொலை தொடர்பாக முன்னாள் உதவிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் ராஜபக்ஷாக்களின் சட்டவாளர்களுடன் கோத்தபாயவின் வீட்டில் சிறப்புக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கோத்தபாயவிற்கு நெருக்கமான அதிகாரியான அநுர சேனநாயக்க, கோத்தபாயவின் கட்டளைகளுக்கு இணங்கச் செயற்பட்டார் என்பதில் எவ்வித இரகசியமுமில்லை. அநுரவின் கைதானது கோத்தபாயவிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



கோத்தபாயவைக் கைதுசெய்வதற்கான சரியான நேரத்திற்காக ஊழல் மற்றும் மோசடிக்கான இயக்குனர் டில்ருக்சி காத்திருப்பதை வெளிக்காட்டும் சுவரொட்டிகள் கடந்த வார இறுதியில் நாடு முழுவதும் ஒட்டப்பட்டன. கடந்த 4 ஆம் திகதி இவ்வாறான சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட வேளையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவராக கோத்தபாயவை நியமிக்க முடியும் என அமைச்சர் ஜோன செனவிரத்ன பரிந்துரை செய்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து பணியாற்றுவதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்வதாக கோத்தபாய தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பதவியொன்றை கோத்தபாயவிற்கு வழங்கவேண்டும் என்கின்ற கருத்தை வலியுறுத்தியவர் அமைச்சர் ஜோன் செனவிரத்ன ஆவார்.

ஒரு வாரத்தின் முன்னர், எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் டிலான் பெரேரா உட்பட முக்கிய அமைச்சர்கள் சிலருடன் அமைச்சர் ஜோன் செனவிரத்ன கலந்துரையாடலை மேற்கொண்டிருந்த போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவராக கோத்தபாய நியமிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். இதற்கப்பால், இலங்கை இராணுவப் படைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும் என அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்திருந்தார்.


இவ்வாறானதொரு குழப்பகரமான அறிவித்தலை ஜோன் செனவிரத்ன வெளியிட்ட போதிலும் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் அமைதி காத்து வருகிறார். மைத்திரிக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜோன் செனவிரத்னவின் குழப்பகரமான அறிவித்தல் தொடர்பாக மைத்திரியிடம் தெரியப்படுத்திய போது, எவரும் தன்னிடம் இவ்வாறானதொரு பரிந்துரையை முன்வைக்கவில்லை என அவர் பதிலளித்தார்.



அநுர சேனநாயக்க கைதுசெய்யப்பட்ட பின்னர், கோத்தபாய வார இறுதி ஊடகத்தைத் தனது நலனுக்காகப் பயன்படுத்தியுள்ளதைக் காண முடியும். ஜோன் செனவிரத்னவினால் வெளியிடப்பட்ட அறிக்கையைப் பயன்படுத்தி கோத்தபாயவிற்கு எதிராக விசாரணை ஒன்றைச் செய்வதானது பொலிஸ் துறைக்கு மிகவும் சாதாரணமான விடயமாகும். இதன்மூலம் கோத்தபாயவை அச்சுறுத்த முடியும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவராக நியமிக்கப்படக் கூடிய அதிகாரத்திலுள்ள கோத்தபாயவிற்கு எதிரான விசாரணை அல்லது கைதை துரிதப்படுத்த முயற்சிக்கும் போது இதற்கான எதிர்ப்புப் பலமாக இருக்கும் என்பதை பொலிஸார் நன்கறிவர்.

வார இறுதி ஊடகத்தை கோத்தபாய தனது பரப்புரைக்காகப் பயன்படுத்தியதானது பொலிஸை அச்சுறுத்தும் நோக்கத்தைக் கொண்டதாகும். இராணுவ வீரர்களைக் காப்பாற்றுவதற்கான எந்தவொரு தேசிய பரப்புரையையும் தன்னால் ஆரம்பிக்க முடியும் என்பதையே கோத்தபாயவின் ஊடகப் பரப்புரையானது சுட்டி நிற்கிறது. கோத்தபாயவின் தலைமையின் கீழ் இராணுவ வீரர்களைப் பாதுகாப்பது தொடர்பான் தேசியப் பரப்புரையானது கொழும்பிலுள்ள சிறி சம்புடத்வ ஜயந்தி மத்திய அரங்கில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பிற்கு முதல் நாள் கொஸ்கம



இராணுவ முகாமில் பாரிய ஆயுதக்கிடங்கு வெடிப்பிற்கு உள்ளாகியது. இந்த வெடிவிபத்தானது தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது என இராணுவ வீரர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய பரப்புரையைப் பிரபலப்படுத்தும் ராஜபக்ஷவிற்கு ஆதரவான இணையத்தளம் செய்தி வெளியிட்ட அதேவேளையில், இதற்கான பொறுப்பை இராணுவக் கட்டளைத் தளபதி பொறுப்பேற்க வேண்டும் என கோத்தபாய தெரிவித்தார். இந்த வெடிவிபத்தால் பாரிய அழிவு ஏற்பட்டது.

இத்தகைய ஆபத்தான சூழலை முன்னுணர்ந்த போதிலும் கோத்தபாய ராஜபக்ஷவால் அரசாங்க நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் விபரங்களைத் தருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இழைக்கப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு எதிராக அரச அதிகாரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளப்போவதாக அச்சுறுத்தல் விடுத்த வேளையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கோத்தபாயவால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் பெயர் விபரங்களைத் தருமாறு கோரியிருந்தார்.

இராணுவ அதிகாரிகளும் இந்த அச்சுறுத்தலுக்குக் காரணமாக இருந்தார்களா என ரணில் சந்தேகம் கொண்டுள்ளார். ஊழல் மோசடி ஆணைக் குழுவானது இராணுவ அதிகாரிகளால் இழைக்கப்பட்ட ஊழல் மோசடி தொடர்பாக விசாரணை செய்ய முற்பட்ட அதே வேளையில் இவ்வாறானதொரு அச்சுறுத்தல் ஏற்பட்டதால் அதனை வெறுமனே விபத்து எனக் கணிக்க முடியாது.

அவன் கார்ட் ஆயுத விவகாரம் தொடர்பாக கோத்தபாய மீது குற்றம் சுமத்தப்பட்ட போது, நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கான கட்டளைகளை வழங்கிய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் தயமந்தி ஜெயரட்ன இவ்வாறான அச்சுறுத்தல்களை வழங்கக் கூடிய மிக முக்கிய நபராகக் கருதப்படுகிறார். ஊழல் மோசடி விசாரணைக் குழுவானது இவருக்கு எதிராக விசாரணை மேற்கொண்ட போது இவர் பதிலளிக்கவில்லை. இதன் பின்னர் இவர் பாதுகாப்பு அமைச்சிலிருந்து வெளியேற்றப்பட்டார். இவர் தனது பதவியையும் இழக்க வேண்டியேற்பட்டது.

இவர் பின்னர் வஜிர அபயவர்த்தனவின் அமைச்சில் மேலதிக செயலராகப் பதவி வகித்தார். வஜிர மீதும் அவன் கார்ட் ஆயுத விவகாரம் தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்டது. வஜிரவின் அமைச்சில் பணியாற்றிய தமயந்தி ஜெயரட்ன பின்னர் வெளிநாட்டிற்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றார். இவருக்கு இத்தகைய அனுமதி கொடுப்பதற்கு முன்னர் இவர் மீது ஊழல் மோசடி ஆணைக் குழுவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

இவருக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணை மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், ஊழல் மோசடி ஆணைக்குழுவின் முன்னால் கோத்தபாயவால் ஆர்ப்பாட்டம் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன்பின்னர், கோத்தா மீதான விசாரணை மற்றும் கைதிற்கு நீதிமன்றால் தடைவிதிக்கப்பட்டது. ஒரு ஆண்டின் முன்னர் வழங்கப்பட்ட நீதிமன்றின் இக்கட்டளையை பிரதமர் ர்ணில் விமர்சித்தார்.

கோத்தபாயவின் ஒளித்துப் பிடித்து விளையாட்டின் ஆபத்துத் தொடர்பாக அரசாங்கம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

**ஆங்கிலத்தில்-உபுல்ஜோசப்பெர்னாண்டோ**
**வழிமூலம் -சிலோன் ருடே**
**மொழியாக்கம்-நித்தியபாரதி**

# மதிப்பு ஒன்று: சிந்தனை மாற்றம் ஏன்?

## தொழில் ரகசியம்




கடையில் 'சுப்பர் 100' என்ற அயர்ன் பாக்ஸ் பார்க்கிறீர்கள். ரூ. 1,100 மதிப்புள்ள இப்பொருள் இப்பொழுது ரூ.500 மட்டும் என்ற அறிவிப்புடன். உடனே வாங்குவீர்களா?. இரண்டு கடை தேடிப் பார்ப்போம் என்று நினைப்பீர்களா?

'நல்ல டீல். இங்கேயே வாங்குவேன்' என்கிறீர்களா? உங்களைப் போல்தான் ஆய்வில் நூற்றுக்கு 75 பேர் கூறினார்கள்.

இன்னொரு கடையில் இருக்கிறீர்கள். கடையில் 'சுப்பர் 100' என்ற அயர்ன் பாக்ஸ் பார்க்கிறீர்கள். ரூ.500 இருந்த இப்பொருள் இப்பொழுது ரூ.450 மட்டுமே என்ற அறிவிப்புடன். இதை வாங்குவீர்களா, இல்லை இன்னும் 2 கடை தேடிப் பார்ப்போம் என்று நினைப்பீர்களா?

'இன்னும் 2 கடை தேடிப் பார்ப்பேன்' என்கிறீர்களா? அதே ஆய்வில் வேறு ஒரு நூறு பேருக்கு இந்த கேள்வி கேட்கப்பட 78 பேர் இதையே கூறினர்.

பலரும் இப்படியே கூறியிருக்கிறார்கள் என்பதால் நீங்கள் நினைத்தது சரியான அணுகுமுறை என்று தோன்றுகிறதல்லவா?

## வர்த்தக உலகம்

**ஆர்.எஸ்.கே.முருகதாஸ்**

யோசித்துப் பாருங்கள். இரண்டு கதை களிலும் கேட்கப்பட்டது ஒரே பிராண்ட் பற்றி. 2-வது கதை (டையில்தான் விலை குறைவு. இங்குதான் வாங்க வேண்டும். ஆனால் ஐம்பது ரூபாய் அதிகம் இருந்த கடையில் வாங்கவே அனைவரும் விரும்பினர். நீங்கள் உட்பட!

ஏன்?

இதை தெரிந்துகொள்ள நீங்கள் 'பிராஸ்பெக்ட் தியரி' (Prospect Theory) பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். இதை படைத்தவர்கள் 'டேனியல் கான்மென்' மற்றும் 'அமாஸ் வெர்ஸ்கி'. கான்மென்னுக்கு பொருளாதாரத்தில் நோபல் பரிசு வாங்கித் தந்த கோட்பாடு. வெர்ஸிக்கு தான் பாவம் கொடுப்பினை இல்லை. பரிசு அறிவிக்கும் முன் அவர் இறந்துவிட்டார்.

மக்கள் முடிவெடுக்கும் முறை பொதுவான பொருளாதார ஊகங்கள்படி இல்லாமல் அதற்கு முற்றிலும் மாறாக அமைகிறது. எடுக்கப்படும் முடிவுகள் சீர்தூக்கி பார்க்கப்பட்ட அறிவு சார்ந்த முடிவுகளாக இருப்பதில்லை. கிடைக்கும் தகவலை உணர்வுபூர்வமாக ஆராய்ந்தே பலர் முடிவெடுக்கின்றனர். இந்த விடயத்தை மையமாக வைத்து பின்னாளில் உருவானது Behavioural Economics என்ற இயல். இதை பற்றி இன்னொரு சமயம் பாக்கலாம்.

பிராஸ்பெக்ட் கொள்கைக்கு வருவோம். இதன் முக்கிய அம்சங்களில் ஒன்று மக்கள் ஆய்வு செய்யும் முறை. ஒரு விடயத்தை நாம் உள்ளது உள்ளபடி அப்படியே 'அப்சலூட்'டாக ஆய்வு செய்வதில்லை. எந்த விஷயத்தையும் ஒரு ரெஃபரென்ஸ் பாய்ண்ட் கொண்டு பார்க்கிறோம். செல்லும் வண்டியின் வேகத்தை கடந்து போகும் காட்சிகளைப் பார்த்து தெரிந்துகொள்வது போல. கடந்து போகும் காட்சிகளே இங்கு ரெஃபரென்ஸ் பாயின்ட்.

நாம் செல்லும் வண்டி எவ்வளவு வேகமாக போனாலும் நம் வண்டியை தாண்டி மற்ற வண்டிகள் ஓவர்டேக் செய்தால் நாம் வேகமாக போகாதது போல் உணர்கிறோம். மற்ற வண்டிகள் ரெஃபரென்ஸ் பாயின்ட்டாய் இருப்பதால்.

ஆரம்பத்தில் பார்த்த சுப்பர் 100 அயர்ன் பாக்ஸ் கேள்விக்கு திரும்புவோம். கடை நிர்ணயித்த விலையை ரெஃபரென்ஸ் பாயிண்டாக நீங்கள் பார்த்தீர்கள். ரூ.1,100 பொருள் ரூ.500 எனும்போது விலை ஏகத்துக்கும் குறைந்தது போல் தோன்றுகிறது. அதே பொருள் 500 ரூபாயிலிருந்து ரூ.450 எனும்போது விலை குறைப்பு பெரியதாய் தெரியவில்லை.

இரண்டு கேள்விகளில் கேட்கப்பட்டதும் ஒரே பிராண்ட் தான். இரணடாவது கடையில்தான் விலை குறைவு. இங்கு தான் வாங்க வேண்டும். ஆனால் பலர் தேர்ந்தெடுத்தது முதல் கடையின் அதிகமான விலையை!

ரிவி விளம்பரங்களிலும் ரெஃபரென்ஸ் பாயின்ட் சமாச்சாரத்தை பார்க்கலாம். அரை மணி நேர விளம்பரம் ஒன்று 'உங்கள் சமையலறையை அழகாக்கி சமையலை எளிதாக்கி அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் இந்த அபூர்வ சமையலறை செட் மூவாயிரம் ரூபாய் இருக்கும், நான்காயிரம் ரூபாய் இருக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள். இல்லை. இந்த அரிய சமையலறை செட் வெறும் ஐநூறு மட்டுமே' என்று கூறும்.

மூவாயிரம், நாலாயிரம் என்று ரெஃபரென்ஸ் விலையை அதிகரித்து ஐநூறு ரூபாய் மட்டுமே எனும் போது சமையலறை செட் மலிவாய் தோன்றுகிறது. வாங்கலாமா என்று ஆசை வருகிறது. அதோடு விடமாட்டார்கள் சந்தைப்படுத்துனர்கள். பிராஸ்பெக்ட் கொள்கையா கொக்கான்னானா.

அதே விளம்பரம் இன்னும் தொடரும்: 'இந்த சமையலறை செட் கண்ணைப் பறிக்கிறதா. உங்களுக்காக இன்னொரு அரிய வாய்ப்பு. கீழ்கண்ட தொலைபேசி எண்ணுக்கு இப்பொழுதே தொடர்பு கொண்டு சமையலறை செட்டை ஓர்டர் செய்தால் இன்னொரு சமையலறை செட் முற்றிலும் இலவசம். ஆம், வெறும் ரூ.500க்கு இரண்டு சுப்பர் சமையலறை செட். உடனே முந்துங்கள்' என்று விளம்பரம் முடியும்.

விளம்பரம் பார்ப்பவர் மனதில் பிராஸ்பெக்ட் தியரி திரி கிள்ளி நெருப்பு வைத்துவிடும். கணவரை பிடுங்கித் தின்று சமையலறை செட் வாங்கும் வரை அந்த நெருப்பு ஓயாது. சும்மாவா. மூவாயிரம், நான்காயிரம் என்று விலையை ரெஃபரென்ஸ் செய்து ஐநூறு என்றவுடன் உருகத் தொடங்கிய மனம் இப்பொழுது அதே குறைந்த விலைக்கு இரண்டு சமையலறை செட் என்றால் விடுமா? வீட்டில் கிச்சன் ஒன்றுதானே இருக்கிறது என்று கணவரால் தான் சமாளிப்பு செய்யமுடியுமா!

பிராஸ்பெக்ட் கொள்கையின் பல பரிமாணங்களில் ஒன்று 'டிமினிஷிங் சென்ஸிடிவிடி' (Diminishing Sensitivity) என்ற கோட்பாடு. ரெஃபரென்ஸ் பாயின்ட்டிலிருந்து எத்தனை தள்ளி இருக்கிறதோ அதற்கேற்ப அதன் மீதான நம் பார்வை மாறுபடும் தன்மையை குறிப்பது. 2 கேள்விகள் மூலம் இதை விளக்குகிறோம்.

'பாட்டா' ஷோரூமில் ரூ.1,200க்கு [illegible] பார்க்கிறீர்கள். கடை சேல்ஸ்மன் அதே ஷூ இன்னொரு பாட்டா ஷோரூமில் ரூ.1,100க்கு இருக்கிறது என்கிறார். அந்த ஷோரூமிற்கு ஃபோனில் பேசி அங்கு அதே ஷூ இருப்பதை ஊர்ஜிதம் செய்கிறார். நூறு ரூபாய் மிச்சப்படுத்த அந்த கடைக்கு சென்று வாங்குவீர்களா?

வாங்குவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆய்வுகளில் பலர் இதையே கூறினார்கள்.

'சோனி' ஷோரூமில் இருக்கிறீர்கள். ரிவி ஒன்றை தேர்வு செய்கிறீர்கள். விலை ரூ.29,100. கடை சேல்ஸ்மன் இதே ரிவி இன்னொரு சோனி ஷோரூமில் ரூ.29,000க்கு இருக்கிறது என்கிறார். நூறு ரூபாய் மிச்சப்படுத்த அந்த ஷோரூமிற்கு செல்வீர்களா?

மாட்டீர்கள் என்றும் எமக்குத் தெரியும். பலரும் ஆய்வுகளில் இதையே கூறினார்கள். யோசித்துப் பாருங்கள். இரண்டு இடங்களிலும் ஒரே நிலை தான். அடுத்த கடைக்கு நீங்கள் செல்வதால் மிச்சப்படுத்தப் போவது ரூ.100தான், ஆனால் ரூ.1,200 எனும் போது மிச்சப்படுத்தும் ரூ.100 பெரியதாகப்படுகிறது. ரூ.21,000 எனும் போது அதே ரூ.100 சல்லிக் காசாகபடுகிறது. ஏனெனில் இரண்டு சமயங்களிலும் ரெஃபரென்ஸ் பாயின்ட் மாறுபடுவதால்.

இதிலிருந்து அறிவிப்பது என்னவென்றால்............................ என்று எதற்கு விளக்கிக்கொண்டு. பிராஸ்பெக்ட் கொள்கையை வைத்து உங்கள் பிராஸ் பெக்ட்ஸை எப்படி உயர்த்துவது என்பதை நீங்களே சிந்திக்க மாட்டீர்களா என்ன!

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,519.23 | 6,530.50 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,416.47 | 3,423.82 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 3,065.491

***உயர்வைத்தபங்குகள்(ரூ)*** எஸ்எம்பி லீசிங்(W)(0.40), நவலோகா(4.80),நேசன் லங்கா(1.60),எஸ்எம்பி லீசிங் (0.80),மிலேனியம் ஹவுஸ்(8.40).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிஐஎப்எல்(0.50), ரன்ஜிறின்(58.60), ஹபுஹஸ்ரேன்(17.50), ஜோன்ஸ் கீல்ஸ்(66.30), அனிலங்கா ஹோட்டல்ஸ்(2.60).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# மூலதன சந்தை அறிமுகம்

## அரசாங்க கடன் பிணையங்கள்

அரசாங்கம் தனது குறுங்கால மற்றும் நீண்ட கால நிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரிப் பிணையங்கள் அரச கடன் பிணையங்கள் எனப்படும். அவற்றை திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள் என 2 வகையாக பிரிக்கலாம். அரசாங்கத்தின் சார்பாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படு கடன் திணைக்களத்தினால் பிணையங்கள் மக்களுக்கு ஏல விற்பனை மூலம் வழங்கப்படுகின்றன.

திறைசேரி உண்டியல்கள் (Treasury Bills) அரசாங்கமானது, தனது நானாவித செலவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் குறுகிய கால கடன் பிணையங்கள் திறைசேரி உண்டியல்கள் எனப்படும்.

இவை வாரந்தோறும் நடைபெறும் ஏலத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும். திறைசேரி உண்டியலில் காணப்படும் விசேட பண்புகள் திறைசேரி உண்டியல்கள் குறுகிய கால கடன் பிணையங்கள் ஆகும். அதாவது இவை ஆகக் கூடுதலாக ஒரு வருட முதிர்வு காலத்தை கொண்டவையாக காணப்படும். மேலும் இவை 3 வகையான முதிர்வு காலங்களை கொண்டிருக்கும். அவையாவன, மூன்று மாதங்கள் (91 நாட்கள்), ஆறு மாதங்கள் (182 நாட்கள்), பன்னி ரெண்டு மாதங்கள் (364 நாட்கள்) போன்றனவாகும்.

எப்பொழுதும் திறைசேரி உண்டியல்கள் கழிவு விலையில் வழங்கப்படும். அதாவது பெயரளவு பெறுமதியை விட குறைந்த பெறுமதிக்கு வழங்கப்படும். இங்கு பெயரளவு பெறுமதியே முதிர்வு பெறுமதியாகவும் கருதப்படும். உதாரணமாக 100 ரூபாய் பெறுமதியுடைய ஆறு மாதத்தில் முதிர்வடையும் உண்டியலொன்று 90 ரூபாய் வழங்கப்படலாம். இங்கு முதலீட்டாளரது கொள்வனவு விலை 90 ரூபாய் ஆகும். முதிர்வு காலத்தில் அவர் பெறும் தொகை 100 ரூபாய் ஆகும். ஆறு மாத காலத்துக்கான அவரது வருமானம் 10 ரூபாய் ஆகும். திறைசேரி உண்டியல்கள் அரசாங்க உத்தரவாதத்துடன் வழங்கப்படுவதால் நட்ட அச்சமற்ற பிணை யங்களாக கருதப்படும். அதாவது முதிர்வு காலத்தில் அதன் பெயரளவு பெறுமதியை வழங்க அரசாங்க உத்தரவாதம் காணப்படுவதால் ஆகும்.

திறைசேரி முறிகள் (Treasury Bonds) அரசாங்கமானது, தனது நீண்ட கால அபிவிருத்தி திட்டங்களுக்கும், நீண்ட கால நிதித் தேவைகளையும் மேற்கொள்வதற்காக வழங்கப்படுகின்ற பிணைப்பத்திரமே திறைசேரி முறிகள் எனப்படும். பொதுவாக இவை ஒரு வருடத்துக்கு மேற்பட்ட முதிர்வு காலத்தை கொண்டிருக்கும். அண்மையில் அரசாங்கம் 30 வருட கால முதிர்வு கொண்ட முறிகளை வழங்கியிருந்தமையை இங்கு குறிப்பிடலாம். இவையும் உண்டியல்களைப் போன்று அரச பொதுப்படு கடன் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படுகின்றன. திறைசேரி முறிகளின் சில முக்கிய பண்புகள் பின்வருமாறு திறைசேரி முறிகள் நீண்ட கால அரச கடன் பிணையங்கள் ஆகும்.

உதாரணமாக 2,3,4,10,15, 20,30 வருடங்களை முதிர்வு காலங்களாக கொண்ட பிணையங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. திறைசேரி முறிகளுக்கு நிலையான வட்டி வீதமென்று அரையாண்டுக்கொரு முறை வழங்கப்படுகின்றது. உதாரண மாக 10% வட்டி வீதத்தில் வழங்கப்பட்டுள்ள 100 ரூபாய் பெயரளவு பெறுமதியுடைய திறைசேரி முறி ஒன்று வருடத்துக்கு 10 ரூபாயை வட்டியாக பெற உரித்துடையதாகும். மேலும் இந்தப் 10 ரூபாயானது, அரையாண்டுக்கொரு முறை 5 ரூபாய், 5 ரூபாய் ஆக வழங்கப்படும். மேலும் முதிர்வு காலம் முடிவடையும் போது அரசாங்கம் அதனுடைய பெயரளவு பெறுமதியை செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளது. திறைசேரி முறிகள் நீண்ட கால நட்ட அச்சமற்ற பிணையங்களாக கருதப்படுகின்றது. காரணம் அரசாங்கமானது வட்டி மற்றும் பெயரளவு பெறுமதியை வழங்குவதற்கு உத்தரவாதம் அளித்திருப்பதனால் ஆகும். திறைசேரி பிணையங்களுக்கு இரண்டு சந்தைகள் காணப்படுகின்றன.

**அவையாவன** 1. முதலாம் தரச் சந்தை 2. இரண்டாம் தரச்சந்தை முதலாம் தரச் சந்தை அரசாங்கமானது பொது மக்களுக்கு பிணையங்களை விற்பனை செய்வதன் ஊடாக நிதியை திரட்டிக் கொள்ளும் சந்தையானது முதலாம் தரச் சந்தை எனப்படும். இம் முதலாம் தரச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள் மாத்திரமே பங்கு பற்றலாம். அத்தோடு முதலாம் தரச் சந்தையில் பிணையங்களானது ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படும். முதலாம் தர வர்த்தகர்களது பிரதான தொழிற்பாடானது முதலாம் தரச் சந்தை ஏல விற்பனையில் பங்கு கொள்வதும் அத்தோடு இரண்டாம் தரச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்வதுமாகும். 2-ம் தரச் சந்தை முதலாந்தரச் சந்தையில் ஏல விற்பனையின் மூலம் வழங்கப்பட்ட பிணை யங்கள் முதலீட்டாளர்களிடையே கொடுக்கல் வாங்கல் செய்யபடும் சந்தை இரண்டாம் தரச்சந்தை எனப்படும்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.35 | 147.12 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.41 | 213.79 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.93 | 167.39 |
| சுவிஸ் பிராங் | 147.58 | 153.81 |
| கனேடிய டொலர் | 111.81 | 116.49 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.33 | 110.29 |
| சிங்கப்பூர் டொலர் | 105.38 | 109.63 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.18 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.62 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இந்த வழக்கில் இவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இவரும் லண்டனில் உள்ள பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்து விடுதலை பெறுவதற்காக சட்டத்தின் துணையுடன் போராடிக் கொண்டிருந்தார்கள்.

என்.எஸ்.கிருஷ்ணன் சிறையில் இருந்தாலும் தன்னுடைய நாடகக் குழுவினர் வேலை இல்லாமல் கஷ்டப்படக் கூடாது என்று எண்ணினார். எனவே நாடகக் கம்பெனியைத் தொடர்ந்து நடத்தும்படி தன் மனைவி டி.ஏ. மதுரத்திடம் கூறினார்.


**நாடகக் கம்பெனியில் பிளவு**

என்.எஸ்.கே.நாடகக் குழுவில், அப்போது எஸ்.வி.சகஸ்ர நாமமும் கே.ஆர்.ராமசாமியும் முக்கிய நடிகர்கள். இவர்களில் யாரிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைப்பது என்று மதுரம் யோசித்தார். முடிவில் சகஸ்ரநாமத்திடம் ஒப்படைக்கத் தீர்மானித்தார்.

இதனால் கே.ஆர்.ராமசாமி வருத்தம் அடைந்தார். என்.எஸ்.கே. நாடக சபாவில் இருந்து விலகி புது நாடகக் கம்பெனி தொடங்கத் தீர்மானித்தார்.

இதைத் தொடர்ந்து நாடகக் குழு இரண்டாகப் பிளவு

# தமிழ் சினிமா வரலாறு





## 182 கே.ஆர்.ராமசாமியுடன் இணைகிறார் சிவாஜி!

பட்டது. சிலர் சகஸ்ரநாமம் அணியிலும் சிலர் கே.ஆர். ராமசாமி அணியிலும் சேர்ந்தனர்.

கே.ஆர்.ராமசாமியுடன் சேர்ந்தவர்களில் சிவாஜியும் ஒருவர்.

பேரறிஞர் அண்ணாவுடன் நெருங்கிய தொடர்பு உடையவர் கே.ஆர்.ராமசாமி. அவர் அண்ணாவைச் சந்திப்பதற்காக காஞ்சிபுரம் சென்றார். போகும்போது சிவாஜி கணேசனையும் தன் ஆதர வாளர்களையும் அழைத்துச் சென்றார்.

அண்ணா அப்போது திராவிட நாடு என்ற பத்திரிகையை நடத்தி வந்தார். அந்தப் பத்திரிகை அலுவலகத்தில் சிவாஜியும் மற்றவர்களும் தங்கினார்கள்.

திராவிடக் கழகத்திலிருந்து தி.மு.கழகம் பிரியாத கால கட்டம் அது (1946). சென்னையில் 7 ஆவது சுய மரியாதை மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் பெரியாரும் அண்ணாவும் தீவிரமாக ஈடுபட்டு இருந்தனர்.

**அண்ணாவின் நாடகம்**

மாநாட்டில் நடிப்பதற்காக சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற பெயரில் ஒரு நாடகத்தை அண்ணா எழுதியிருந்தார்.

இந்த நாடகத்தின் கதைச் சுருக்கம் வருமாறு,

சிவாஜி பெரிய மாவீரன். சாதாரண குடிமகனாக இருந்து பெரிய மன்னனானவன். அந்நிய ஆட்சியை எதிர்த்தவன்.

மராட்டிய சாம்ராஜ்யத்தை உருவாக்கிய போதிலும் அவன் மன்னனாக முடி சூட்டிக் கொள்ள பெரிய எதிர்ப்புக் கிளம்புகிறது. காரணம் அவன் கீழ் ஜாதி! இதனால் காசியில் இருந்து காகப்பட்டர் என்ற பெரிய மதத் தலைவரை அழைத்து வந்து சிவாஜியை சத்திரியனாக மாற்றுகிறார். அதன் பிறகு தான் அவர் சிம்மாசனம் ஏற, இந்துக்கள் சம்மதிக்கிறார்கள்.


இப்படிச் சொல்லும் இந்த நாடகத்தில் சிவாஜியாக எம்.ஜி.ஆரும் காகப்பட்டர் வேடத்தில் அண்ணாவும் மற்றொரு முக்கிய வேடத்தில் டி.வி.நாராயண சாமியும் நடிப்பது என்று முடிவாகியது.

இந்த காலகட்டத்தில் எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் சிறுசிறு வேடங்களில் நடித்து வந்தார். காங்கிரஸ் அனுதாபியாகவும் பக்தராகவும் இருந்தார்.

என்ன காரணத்தினாலோ எம்.ஜி.ஆர். அந்த நாடகத்தில் நடிக்கவில்லை. நாடகத்துக்குப் பொறுப்பாளராக இருந்த நடிகர் டி.வி.நாராயணசாமி அண்ணாவைச் சந்தித்து எம்.ஜி.ஆர். தன்னால் நடிக்க இயலாது என்று கூறிவிட்டதாக தெரிவித்தார்.

(தொடரும்)

# தகுதியுடைய தமிழர்கள் அரச உத்தியோகத்தை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது-சம்பந்தன்



**தகுதியுடைய தமிழர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக, தமிழத்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் முறையிட்டுள்ளார்.**


முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களுக்கும், சிங்களத் தலைவர்கள் சிங்கள வர்களுக்கும் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கின்றனர்.

அத்துடன், அதிகாரத்திலுள்ள குறைந்தளவான தமிழர்களே சில தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதாகவும், தகுதியான தமிழர்களுக்கு அரச பணிகளைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தமிழர்களுக்கு எதிரான பாராபட்சங்கள் பற்றி இலங்கையில் நீண்டகாலமாக முறைப்பாடுள்ளது, எனினும் அதில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார். (இ-5)

# மல்லையாவின் 1411 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் முடக்கம்

## அமலாக்கத்துறை நடவடிக்கை!



தொழிலதிபர் விஜய் மல்லையா இந்தியாவை சேர்ந்த வங்கிகளில் சுமார் ரூ. 9ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கடன் பெற்றுவிட்டு, அதை திருப்பிச் செலுத்தவில்லை. இதுதொடர்பாக வங்கிகள் நடவடிக்கை எடுக்க முயன்ற நிலையில், லண்டனுக்கு தப்பிச் சென்று விட்டார்.

அவரை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்திய அரசின் கோரிக்கையை இங்கிலாந்து அரசாங்கம் நிராகரித்துவிட்டது. இதையடுத்து அவரது கடவுச்சீட்டு முடக்கப்பட்டது.

இந்நிலையில் ஐ.டி.பி.எல். வங்கியில் வாங்கியுள்ள கடன் தொடர்பான வழக்கில் மல்லையாவுக்குச் சொந்தமான ரூ. 1411 கோடி மதிப்பிலான சொத்துக்களை பணமோசடி தடுப்புச்சட்டத்தின் கீழ் முடக்கம் செய்து அமலாக்கத்துறை அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

மல்லையாவுக்கு சொந்தமான வங்கி கணக்கு (ரூ. 34 கோடி), பெங்களூர் மற்றும் மும்பை அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள், சென்னையில் உள்ள ரூ. 4.5 கோடி மதிப்பிலான வணிக மனை, கூர்க் பகுதியில் 28.75 ஏக்கர் பரப்பளவில் உள்ள காபி எஸ்டேட், பெங்களூர் நகரில் 8.4 லட்சம் சதுர அடியில் உள்ள கிங்பிஷர் மாளிகை ஆகியவற்றை அமலாக்கத் துறை முடக்கம் செய்துள்ளது. (இ-5)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் சுட்டுப் படுகொலை

மெக்சிகோவில் மர்ம நபர்கள் 2 பேர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மெக்சிகோவில் பியூப்லா மாகாணத்தில் காடுகளை உள்ளடக்கிய சான்ஜோஸ் எல் மிராடார் பகுதி உள்ளது. இது காஸ்காட்லான் நகரம் அருகே உள்ளது. நேற்று முனதினம் இரவு மர்ம நபர்கள் 2 பேர் ஒரு வீட்டுக்குள் புகுந்தனர். எதிர்பார்க்காத நேரத்தில் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியால் அங்கிருந்த கணவன், மனைவி மற்றும் குழந்தைகள், உறவினர்களை சரமாரியாக சுட்டனர்.

இவர்களில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 11 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். அவர்களில் 5 பேர் பெண்கள். 4 பேர் ஆண்கள் மற்றும் 2 சிறுமிகள் அடங்குவர்.

இவர்கள் தவிர 2 குழந்தைகளுக்கு குண்டு காயம் ஏற்பட்டதால் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப் படுகிறது. இந்த துப்பாக்கி சூட்டில் 5 பேர் அதிர்ஷ்டவசமாக காயமின்றி தப்பினர்.

துப்பாக்கி சூடு நடத்திய கொலையாளிகள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். கொலையாளிகளில் ஒருவன் கொலை செய்யப்பட்ட ஒரு பெண்ணை வன்புணர்வுக்குட்படுத்தியவன் என தெரிய வந்தது. அப்பெண் கர்ப்பிணியாக இருந்தாள். அதுகுறித்த பிரச்சினை காரணமாக இச்சம்பவம் நடந்து இருக்கலாம் என கருதப்படுகிறது. (இ-5)

யானை சேற்றில் அமிழும் போது
தவளையும் எட்டி உதைக்கும்.
- மநு

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பாதிக்கப்பட்டவர்களை யார் தான் பார்க்கின்றனர்

சவுதி அரேபியாவில் உள்ள சட்டங்களில் ஒன்று பாதிக்கப்பட்டவருக்கே மன்னிப்பு வழங்கும் அதிகாரம் உண்டென்பதாகும்.

ஒரு வழக்குத்தொடர்பில் நீதிமன்றம் விசாரணை செய்து தீர்ப்பு வழங்கினாலும் விதிக்கின்ற தண்டனையை குறைக்கின்ற அல்லது அடியோடு தள்ளுபடி செய்கின்ற அதிகாரம் பாதிக்கப்பட்ட தரப்புக்கு உள்ளது.

நீதி உலகில் இந்த நடைமுறை மிகவும் உன்னதமானது என்றே சொல்ல வேண்டும்.

ஏனெனில் பாதிக்கப்பட்ட தரப்பே நிவாரணம் பெறக் கூடியது. ஆக, குற்றமிழைத்தவருக்கு நாட்டின் தலைவர் அல்லது அரசியல் தலைவர்கள் மன்னிப்பு வழங்குவதென்பது எந்த வகையிலும் பொருத்துடையதல்ல.

எனவே, பாதிக்கப்பட்டவர்கள் மன்னிப்பு வழங்குகின்ற அதிகாரத்தைக் கொண்டவர்களாக இருப்பது நீதியை நிலைநாட்டுவதற்கு அவசியமாக இருப்பதுடன் தண்டனைகள் குறைவடைவதற்கும் குற்றமிழைத்தவர்கள் திருந்துவதற்கும் வழி வகுக்கும்.

எனினும் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் யாருமே அக்கறை கொள்வதாக இல்லை. தமிழ் அரசியலைப் பொறுத்தவரை போரினால் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை அரசியல்வாதிகள் மேடைகளில் கூறி வாக்குப்பெற்று பதவிக்கு வருகின்ற நிலைமையே உள்ளது.

பதவிக்கு வந்தவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் போர் பாதிப்புக்கு உள்ளானவர்களை திரும்பியும் பார்ப்பதில்லை.

இதுபோல, போரில் ஈடுபட்டு அங்கவீனமாகிப் போன முன்னாள் போராளிகள் இன்று வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இயங்கிய காலத்தில் புலிப் போராளிகளுடன் கதைப்பது; அவர்களுடன் நட்பு வைத்திருப்பது; விடுதலைப் புலிகளின் செல்வாக்கு தமக்குத் தாராளமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதை எல்லாம் பெருமையாகக் கருதிய எவரும் இப்போது முன்னாள் புலிப் போராளிகள் குறித்தோ, மாவீரர் குடும்பங்களின் அவலங்கள் குறித்தோ திரும்பிப் பார்ப்பதில்லை.

இந்நிலைமைக்கு அப்பால், அரசியல் பதவிகளில் போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஒரு சிலருக்கேனும் இடம்கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அதுவும் நடக்கவில்லை. நிலைமை இதுவாக இருக்கையில், போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நெடுந்துயர் தணிவது கடினமே.

எதுவாயினும் காணாமல் போனோர் தொடர்பில் அமைக்கப்பட்ட அலுவலகத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் கொடுத்திருந்தாலும் இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் கருத்து உள்வாங்கப்படுவது முக்கியம் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இந்நிலைப்பாடு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆறுதலைத் தருகிறது. பொதுவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி, நிவாரணம் என்பன தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் இடம்பெறாமல் அரசியல் தலைவர்களும் படைத்தரப்புகளும் அதிகாரிகளும் கூடிமுடிவெடுப்பதென்பது எந்த வகையிலும் நீதியாகாது.

எனவே, பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களும் அவர்களின் பங்கேற்புகளும் மிகவும் அவசியம் என்பதால் இதை நம் அரசியல் தலைமைகள் வலியுறுத்தி அமுலாக்க வேண்டும்.

## வெனிலா வாசனைத் திரவியத்தின் உற்பத்தியினை அதிகரிக்கத் திட்டம்

இலங்கையில் உற்பத்தியாகும் அரியவகை வாசனைத் திரவியமான வெனிலா உற்பத்தி நல்ல விளைச்சல் கொடுத்திருப்பதன் காரணமாக சுமார் பத்தாயிரம் கிலோவுக்கும் அதிகம் பெரும்போகத்தில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக கண்டி வெனிலா உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் முத்துபண்டார மடுகல்ல தெரிவித்தார்.

ஒக்டோபர் இறுதிப் பகுதியில் கொள்வனவு செய்ய தயாராவதுடன் ஒரு கிலோ ஆயிரத்து 500 ரூ. முதல் விலை மதிக்கப்பட இடமிருப்பதாக அவர் தெரிவித்தார். தற்போது இலங்கை வெனிலாவுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக கண்டி, மாத்தளை, குருநாகல், பதுளை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் இது செழித்து வளருவதாகவும் இப்பிரதேசங்களில் ஆயிரம் விவசாயிகள்வரை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுமார் 500 ஏக்கர் நிலத்தில இது பயிரிடப்படுவதாகவும் அவர் மேலும்கூறினார். (செ-12)

## முப்படையினருக்கு காலஅவகாசம்

சட்டவிரோதமாக பணியில் இருந்து நீங்கிச் சென்ற முப்படையினர் மற்றும் அதிகாரிகளுக்கு உத்தியோக பூர்வமாக இராஜினாமா செய்யும் வாய்ப்பு இன்று முதல் வழங்கப்படவுள்ளது.

இதன்படி ஒரு மாத காலப் பகுதி பதவி விலகலின் நிமித்தம் வழங்கப்படவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தில் இருந்து 25 ஆயிரம் பேர், கடற்படையில் இருந்து 7 ஆயிரம் பேர் மற்றும் விமானப் படையில் இருந்து 510 பேர் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது. (செ-12)

## பண்பாட்டு ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பண்பாட்டு ஊர்வலம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகிநடைபெறவுள்ளது.

மேற்படி ஊர்வலமானது சுன்னாகம் பேருந்துத் தரிப்பிடத்தில் ஆரம்பமாகி அங்கிருந்து மல்லாகம் வீதி வழியாகச் சென்று கல்லூரி மைதானத்தை அடையவுள்ளது.

இந்நிகழ்வின்போது தமிழர் கலை கலாசாரத்தை பிரதிபலிக்கும் பண்பாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராகபழைய மாணவர் எஸ்.குகதாசன் கலந்துகொள்ளவுள்ளார்.(செ-5)

## இரத்ததான முகாம்

உலக குருதிக் கொடையாளர் தினம் நாளை 14ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத்தினத்தை முன்னிட்டு அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள சர்வோதயம் கேட்போர் கூடத்தில் நடமாடும் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இரத்ததானம் செய்ய விரும்பும் குருதிக் கொடையாளர்கள் அங்கு சமுகம் கொடுத்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்குஒத்துழைப்புவழங்குவதுடன் அன்றைய தினத்தில் வழங்கப்படும் விசேட சான்றிதழையும்பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இரத்தவங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே அதிகளவு குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் செய்தால்தான் இத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யக் கூடிய நிலை காணப்படுவதால் உங்களுக்கு அருகிலுள்ள இரத்த வங்கிகளுக்குச் சென்றும் இரத்ததானம்செய்யலாம் எனயாழ்.போதனாவைத்தியசாலையின் இரத்தவங்கி வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

# மேஜர் ஜெனரலாக 5 பேர் பதவியுயர்வு

(கொழும்பு)

பிரிகேடியர் தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகள் 5 பேர் மேஜர் ஜெனரல் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.


கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஆர்.ஏ.ஏ.ஏ.பெரேரா, எச்.டீ.பி.பன்னல, பீ.எச்.எம்.ஏ.விஜேசிங்க, ஏ.எம். ஏ.என். ரணவண, கே.பீ.ஏ.ஜயசேகர ஆகியோரே மேஜர் ஜெனரலாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை மணிவரை யாழ் பிரதேசத்தில சங்கத்தானை, டச்சு றோட் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் குமுழமுனை, அன்புபுரம், நாச்சிக்குடா, முழங்காவில், வெள்ளாங்குளம், 651ஆவது படைப பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற் படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குட்செட் வீதி, குருமன்காடு கிராமம், சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



ஐந்தாம் நாள் (12.06.2016)

கரிய முகக் கடவுளான
கணபதியே கருணையுடன்
கேளும் ஐயா கணபதியே...
வேதனைகள் போக்கியே
சாதனைகள் புரிய வையும்
தீங்கான அனைத்தையும்
உன் திருவருளால் அகற்றியே...
திருக்காட்சி தந்தருள்வாய்
சித்தி விநாயகனே!

த.தவப்பிரியா

## தப்பிச் சென்றிருந்த சிறைக்கைதி 4 மாதங்களின் பின் மீண்டும் கைது

பத்து வருட சிறை தண்டனையை அனுபவித்து வந்த ஒருவர் வேறு ஒரு வழக்குக்காக நீதிமன்றம் அழைத்து வரும்போது தப்பிச்சென்று நான்கு மாதங்களின் பின் மீண்டும் பொலிஸாரால் கைது செய்யபட்ட சம்பவம் குருநாகலில் இடம்பெற்றுள்ளது.

குருநாகல் வீரம்புகெதர பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது இளைஞன் ஒருவன் பத்து வருட சிறைத தண்டனையை அனுபவித்து வந்த வேளையில் வேறு ஒருவழக்குக்காக குருநாகல் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட சமயமே சிறை அதிகாரிகளின பிடியிலிருந்து தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபருக்கு வீடுடைப்பு மற்றும் வழிப்பறிக் கொள்ளை உட்பட 8 வழக்குகள் இருந்துள்ளன.

அதிலொரு வழக்கிலே குற்றவாளியாகக் காணப்பட்டு 10 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டு அனுபவித்து வந்தபோது நான்கு மாதங்களுக்கு முன் தப்பிச் சென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் குருநாகல் நீதவான் செல்வி கீத்தானி விஜேசிங்க முன் வீரம்புகெதர பொலிஸார் ஆஜர் செய்தபோது நீதவான் 10 வருட சிறைத் தண்டனையை மீண்டும் அமுல்படுத்துமபடி உத்தரவிட்டார். (செ-12)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மௌனகாலம்



மௌனத்தில் பழகிப் பழகித் தான் எண்ணங்களை வெற்றி கொள்ள வேண்டும். மௌனத்தில் கிடைக்கக் கூடிய நல்ல எண்ணங்கள், முன் செய்த நல்ல செயல்களின் பதிவுகள் எல்லாவற்றையும் குறிப்பெடுத்துக் கொண்டு அவற்றைச் செயல்படுத்தி விட்டோமானால், வாழ்க்கையில் மேம்பாடு வரும்.

இவைகளை எல்லாம் அனுபவத்தில் நீங்கள் பார்க்கலாம். நாம் பேசிக் கொண்டிருக்கும்போது, உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருக்கிறோம். நமக்கு யார் யாருடைய கருத்துக்கள் வான் காந்தத்திலிருந்து வரும் என்றால், உணர்ச்சிவயப்பட்ட நிலையில் உள்ளவர்களின் கருத்துத் தான் வரும். அவை நமது மூளையோடு சேர்ந்து நமது எண்ணங்களாக வரும்.

ஆனால், மௌனத்தில் பேரமைதி நிலைக்கு வந்தால், அமைதியாக இருந்து ஆராய்ச்சி செய்து, இறைநிலையை உணர்ந்து, அதோடு தொடர்பு கொண்டால், அந்த நிலையை உணர்ந்த பெரும் மகான்கள், அவர்களுடைய ஆற்றல்கள், எண்ணங்கள் எல்லாம் நம்முடைய எண்ணங்களாக வரும். அதை எல்லாம் அனுபவித்துப் பார்க்கலாம். அனுபவித்துப் பார்ப்பதற்கு ஏற்ற காலம் தான் மௌன காலம்.

எவ்வளவு காலம் மௌனம் மேற்கொள்ளலாம்?


நீங்கள் ஒரு நாள் மௌனம் இருக்கலாம். இரண்டு நாளும் இருக்கலாம். ஆனால், அந்த மௌன காலத்தில் கிடைத்த பயன்களை நினைவில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

போகப்போக ஒரு மணி நேரம் மௌனம் இருந்தால் கூடப் போதும். ஆனாலும், அந்த ஒரு மணி நேரமும் வெற்றி அளிப்பதாக இருக்கும். இங்கேயும் அங்கேயும் மனதை ஓடவிடாது வைத்து இருக்க முடியும்.

அப்படி இருந்து பழகிவிட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். எந்தச் செயல் செய்தாலும் பதிவாகி அந்தந்தப் பதிவுகள் அவ்வப்போது எண்ணங்களாக வருகின்றன அல்லவா? அதேபோல மௌன காலத்தில் நீங்கள் இறைநிலையில் இருந்து ஏற்படுத்திக் கொண்ட மௌனப் பதிவும் சாதாரண காலங்களில் கூட மேலே வந்து அவ்வப்போது அமைதி நிலைக்கு உங்கள் மனதை அழைத்துச் செல்லும்.

# J.P.L வெற்றிக்கிண்ணம் - 2016

# ஜொலிஸ்ரார், மானிப்பாய் பரீஸ் தகுதிகாண் காலிறுதிக்கு தகுதி





J.P.L வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் 4 ஆவது வருடமாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் A பிரிவு போட்டிகள் முடிவுற்றன.

அப் பிரிவிலுள்ள கழங்களுக்கிடையில் நடைபெற்ற தகுதிகாண் போட்டிகளில் இருந்து ஜொலிஸ்ரார் அணி முதலாவது இடத்திலும் மானிப்பாய் பரீஸ் அணி இரண்டாவது இடத்திலும் தகுதி பெற்று தகுதி காண் காலிறுதி போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஜொலிஸ்ரார் அணி, மானிப்பாய் பரீஸ் அணியையும் நியூஸ்ரார் அணியையும் யங்ஸ்ரார் அணியையும் வெற்றி பெற்று தகுதி காண் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மானிப்பாய் பரீஸ் அணி, நியூஸ்ரார் அணியையும் யங்ஸ்ரார் அணயை வெற்ற பெற்று ஜொலிஸ்ரார் அணியுடன் தோல்வியடைந்தும் தகுதிகாண் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற் றமை குறிப்பிடத்தக்கது. ஜொலிஸ்ரார் அணி B பிரிவில் இரண்டாம் இடத்தை பெறும் அணியுடன் முதலாவது தகுதி காண் காலிறுதிப் போட்டியிலும் மானிப்பாய் பரீஸ் அணி B பிரிவில் முதலாமிடத்தை பெறும் அணியுடன் இரண்டாவது தகுதிகாண் காலிறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முதலாவது தகுதி காண் காலிறு திப் போட்டியில் வெற்றி பெறும் அணி பிரிவு 1 இற்கு தகுதி பெறுவர். 2 ஆவது தகுதிகாண் காலிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி பிரிவு 2 இற்கு தகுதி பெறுவர் என் பது குறிப்பிடத்தக்கது. (கு)

## ஹென்றீசியன் சவால் கிண்ணம்

## சென்.ஹென்றீஸ் - சென்யூட் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. அண்மையில் நடைபெற்ற போட்டியில் சென் ஹென்றீஸ் கல்லூரி எதிர் முல்லைத்தீவு சென்யூட் அணிகள் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி முதல் பதினைந்து நிமிடம் வரை சென்யூட் அணியின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வேடிக்கை பார்த்தது சென்.ஹென்றீஸ் கல்லூரி.

ஆரம்பத்தில் நடுக்களம் (midfi eld) சிறப்பாக ஆடாததால் அடுத்தடுத்து பின்களத்தில் (diffensive area) பந்துகள் செல்ல குழப்பமடைந்தது சென் ஹென்றீஸ். இந்நிலையில் முதல் பாதியின் 11 ஆவது நிமிடத்தில் சென்யூட் வீரர் தீபன் கோலடித்து முன்னிலைப்படுத்தினார்.

ஹென்றீஸ் வீரர்கள் கோலடிக்க ஆட்டத்தை வேகப்படுத்திய போதும் சென்யூட் அணியின் பின்களம் அதற்கு இடமளிக்கவில்லை. ஆரம்பத்தில் சென்யூட் வீரர் பியூஸ்லஸ் பின்களத்தில் (diffence position) ஆடியிருந்தார். அத்துடன் சென்யூட் அணியின் ஆட்டம் அனைவரையும் கவர்ந்திருந்தது. இரண்டாவது பாதியில் ஹென் றீஸ் அணி ஆட்டத்தின் போக்கை மாற்றியது.

அவ் அணியின் இடது கரை முன்கள வீரர் தனேஸின் ஆட்ட வேகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதனைப் பயன்படுத்தி அடுத்தடுத்து இரண்டு கோல்களை போட்டு அசத்தியது சென் ஹென்றீஸ். இறுதியில் ஆட்டம் மேலும் பரபரப்பை எட்டியது.

கிடைத்த வாய்ப்புகளை ஹென்றீஸ் அணி தவறவிட்டது. எனினும் இறுதி நிமிடத்தில் கோல் காப்பாளர் விட்ட தவறால் 2 ஆவது கோலை போட்டு ஆட்டத்தை சமப்படுத்தியது சென் யூட் அணி.

இதன் மூலம் ஏற்கனவே ஒரு வெற்றியுடன் 4 புள்ளிகளைப் பெற்று C பிரிவில் முதல் அணியாக காலிறுதிக்குள் நுழைந்தது சென் ஹென்றீஸ் கல்லூரி அணி.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக சென். ஹென்றீஸ் வீரர் தனேஸ்சும் சென் யூட் வீரர் பியூஸ்லஸ்ம் தெரிவாகினர். (கு)

## அரையிறுதியில் அளவெட்டி மத்தி

அம்பாள் வி.க. யாழ் மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்ட சுற்று போட்டியில் கால் இறுதி ஆட்டத்தில் கழுகு. வி.க. எதிர்த்து மோதிய அளவெட்டி மத்தி வி.கழகம் அரையிறுதிக்கு முன்னேறியது.

சிறப்பான பந்து வீச்சின் மூலம் கழுகு வி.கழகத்தை 16 ஓட்டங்களுக்குள் சுருட்டியது. பந்து வீச்சில் தயாளன் 3 விக்கெட்களை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மத்தி வி.க 1.2 பந்து பரிமாற்றத்தில் ஜனுதாஸின் பிரமாண்டமான சிக்ஸருடன் வெற்றி பெற்றது. (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வட மாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடை பெறும் போட்டியில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

♦♦♦♦♦♦♦

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் வட மாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் யாழ். பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடை பெறவுள்ள போட்டியில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கு)

## சிற்றி ஸ்போட்ஸ் அணியை வீழ்த்தி புலோலி கிண்ணத்தை கைப்பற்றியது

### அம்பன் பிங்பொங் அணி







சிற்றி போட்ஸ் அணியை வீழ்த்தி புலோலி இளைஞர் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது அம்பன் பிங்பொங் அணி. புலோலி இளைஞர்கள் விளையாட்டுக்கழகம் பெருமையுடன் நடத்திய பதினெட்டு வயதுக்கு குறைந்தோருக்கான அணிக்கு 6 ஓவர்கள் 9 வீரர்கள் கொண்ட போட்டித் தொடரின் இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய சிற்றி ஸ்போட்ஸ் சென்டர் அணியும் அம்பன் பிங்பொங் அணியும் மோதியிருந்தன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிற்றி ஸ்போட்ஸ் சென்டர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர்களில் 5 விக்கெட் இழந்து 35 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அதிக பட்சமாக சுஜித் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 21 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பதிலுக்கு 36 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அம்பன் பிங்பொங் 2.3 ஓவர்களில் எந்த விக்கெட்களையும் இழக்காமல் 36 ஓட்டங்களை பெற்றது.

ஆரம்ப வீரர் தனுசன் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 32 ஓட்டங்களை பெற்றார். வெற்றி பெற்று கிண்ணத்தை தன்வசமாக்கியது அம்பன் பிங்பொங் அணி.

ஆட்டநாயகனாக தனுசன் தெரிவானார். (கு)

# கடற்படையினருக்கான ஈரூடகப் பயிற்சி; வாகரையில் தரையிறக்க ஒத்திகை




(மட்டக்களப்பு)

கடற்படையின் தரையில் போரிடும் படைப பிரிவுக்கான ஈரூடக நடவடிக்கை பயிற்சி நெறியின், இரண்டாவது தரையிறக்க பயிற்சி மட்டக்களப்பு வாகரையில் நிறைவடைந்துள்ளது.

முள்ளிக்குளத்தில் உள்ள கடற்படைத் தளமான எஸ்எல்என்எஸ் பரணவில், கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி ஆரம்பமான இந்த ஏழு வாரகாலப் பயிற்சி கடந்த 9ஆம் திகதி வாகரையில் நிறைவுபெற்றது. 11 அதிகாரிகளும் 108 கடற்படையினரும் இந்த பயிற்சிகளில் பங்கேற்றிருந்தனர்.

கடற்படையின் தரை நடவடிக்கைத் தளபதி கொமடோர் உதேனி சேரசிங்கவின் அழைப்பின் பேரில்,. கிழக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா இந்தப் பயிற்சி நிறைவு நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்கேற்றிருந்தார்.

இந்த இறுதிக்கட்டத் தரையிறக்கப் பயிற்சியின் போது விமானப்படை உலங்குவானூர்திகள், கடற்படையின் தரையிறங்கு கலம் மற்றும் படகுகளும் பங்கேற்றிருந்தன.(செ-12)

## ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு



(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்காக மிக் விமான கொள்வனவில் மேற்கொண்ட நிதி முறைகேடுகள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள, ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு அடுத்த மாதம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடிச் சம்பவம் கடந்த ஆட்சி காலத்தில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக் விமான ஒப்பந்தம் மற்றும் நிதி முறைக்கேடுகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வழக்கின் முக்கிய புள்ளியாக உதயங்க வீரதுங்க இருந்தாலும், தற்போது இவர் உக்ரைனில் வாழ்ந்து வருவதால் இலங்கை அரசாங்கத்தினால் விசாரணைகள் மேற்கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் சட்டமூலங்கள் அடிப்படையில் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இவரை கைது செய்ய அனுமதி வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. (செ-12)

## மத்திய வங்கி ஆளுநருக்கும் ஜனாதிபதிக்குமிடையே பேச்சு!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது.

அர்ஜுன் மகேந்திரனின் பதவிக் காலம் இந்த மாத இறுதியுடன் பூர்த்தியாகவுள்ள நிலையில், குறித்த பேச்சுவார்த்தை இந்த வாரத்தில் நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவிக் காலத்தை நீடிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில் மோசடி இடம்பெற்றதாகவும் உட்சந்தை தகவல்கள் கசிய விடப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மத்திய வங்கியின் ஆளுநருடன் ஜனாதிபதி இந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். (செ-12)

## இராணுவ முகாம்களை அகற்ற தேவையில்லை

### அஸ்கிரிய மகா நாயக்கர் இறுக்கம்

(கொழும்பு)

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டிய எந்த தேவையும் இல்லை என அஸ்கிரிய மகா நாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்தில் மீள் குடியேற்றம் மேற்கொள்ளும்போது சிங்கள மக்கள் குறித்தும் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளில் அவர்கள் மீள குடியமர்த்தி அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே வடக்கின் பாதுகாப்பு நலன்களுக்காக அங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அகற்ற கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று அஸகிரிய மகா நாயக்கரை சந்தித்தபோதே மகா நாயக்கர் இதனை தெரிவித்தார். (செ-12)

## சிறுநீரக நோயை ஒழிக்க தூய குடிநீர்த் திட்டம்

### ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தேசிய பிரச்சினையாகியுள்ள சிறுநீரக நோயை ஒழிப்பதற்கு தூய குடிநீர் வழங்குவதற்கான சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால 'சிறிசேன கூறியுள்ளார்.

நாட்டின் வடமத்திய மாகாணத்தி லேயே அதிக அளவிலான சிறுநீரக நோயா ளர்கள் இருப்பதாக புள்ளி விவரத் தகவல்கள் கூறுகின்ற போதிலும், இந்த நோய் தற்போது நாடு முழுவதும் பரவியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வவுனியா மாவட்டத்தில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வருடமொன்றிற்கு ஐயாயிரம் பேர் புதிதாக சிறுநீரக நோயினால் பீடிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உதவுமாறு உலக நாடுகளிடமும், நாட்டின் வர்த்தக சமூகத்தினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கு உரிய உதவிகள் கிடைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

வவுனியா போகஸ்வெவ என்ற கிராமத்தில தூயகுடிநீர் விநியோக திட்டமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.(செ-12)

## சாலாக முகாமுக்கு பிரதமர் மீள விஜயம்



கொஸ்கம - சாலாவ இராணுவ முகாம் வெடி விபத்து ஏற்பட்டு நேற்றுடன்.ஒரு வாரகாலம் ஆகின்றது.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டாவது முறையாகவும் நேற்று அங்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதமர், விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க நடடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாலாவ பகுதியில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவம் காரணமாக 300க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் பாதிக்கப்பட்டதுடன், ஒரு இராணுவ வீரர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## பாடசாலை மாணவன் விபத்தில் மரணம்

மகியங்கனை வீதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் காயமடைந்து கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் ஒருவன் நேற்று உயிரிழந்துள்ளான்.

கடந்த 29ஆம் திகதி பஸ்ஸில் இருந்து இறங்கிய குறித்த மாணவன் பாதையை கடந்த வேளை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்ததாக மகியங்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபரை கைது செய்து விளக்கமறியலில் வைத்ததுடன் பின்னர் பிணையில் செல்ல அனுமதித்துள்ள பொலிஸார் சிறுவனை கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் குறித்த 14 வயது மாணவன் உயிரிழந்ததையடுத்து மீண்டும் மோட்டார் சைக்கிளின் சாரதியை கைதுசெய்யவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(செ-12)

## 19 பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு பயணத்தில் உள்ளனர்

(கொழும்பு)

பாராளுமன்றத்திலுள்ள ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 19 பேர் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட கூட்டு எதிர்க் கட்சியின் ரோஹித அபேகுணவர்தன, விமல் வீரவங்ச, ஜானக வக்கும்புர மற்றும் லோஹான் ரத்வத்த ஆகியோர் ஜப்பான் விஜயத்தில் உள்ளனர்.

தொழில் பயிற்சி அமைச்சர் ஜோன் செனவிரத்ன சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 105 ஆவது கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு சுவிட்ஸர்லாந்துக்கு விஜயம் செய்துள்ளார்.

சீன-இலங்கை நட்புறவுச் சங்கத்தின் அழைப்பின் பேரில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 13 பேர் சீன விஜயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் அமைச்சர் மஹிந்த அமரவீர, பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க, கூட்டு எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்க ளான டளஸ் அழகப்பெரும, வாசுதேவ நாணயக்கார, ஜே.சீ. அலவதுவல, வடிவேல் சுரேஷ், ஜயந்த சமரவீர, கே.கே. பியதாச, சந்தீத் சமரசிங்க, நிஹால் கலப்பத்தி, ஏ. அரவிந்த் குமார், விஜித பேருகொட மற்றும் ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் இக்குழுவில் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தான்தோன்றித்...

அதிகம் வளர்க்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையின் கீழ் இயங்கும் அறிவகம் கணனிக் கல்வி நிலையத்தில் கணனி மென்பொருள் ஆரம்பக் கற்கை நெறிகளை நிறைவு செய்த மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் நேற்றைய தினம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கணனிக் கற்கை நெறியை எமது மாணவ மாணவியர் தமது அன்றாட கல்வி நடவடிக்கைகளுடன் மேலதிக கற்கைநெறியாகக் கற்றுத் தேர்ச்சி பெற்று விடல் அவசியமாகியுள்ளது. அன்றைய வில்வித்தைக்கு மாற்றீடாக இன்று கணணி வித்தை சிறப்புப் பெற்றுள்ளது. அன்று ஆயுதம் ஏந்தினோம் இன்று அறிவைப் பாவிக்கின்றோம்.

இன்று E – Governance, M – Governance என்று தொலைத் தொடர்புகளும் கல்வி நிலையும், நிர்வாகமும் எங்கெங்கோபோய்க் கொண்டிருக்கின்றன. இன்னும் சில வருடங்கள் நாங்கள் மறைந்து விடுவோம். ஆனால உங்கள் அறிவுவிருத்தியடைய வேண்டும்.

எனவே இன்றையகாலகட்டத்தில் நாம் கணனிக் கற்கைநெறியை முறையாகக் கற்றல் மிகமிக அவசியமானதாகும். அரசின் பல்வேறு செயற் திட்டங்களின் ஊடாக கணனிக் கற்கைநெறிகள் பல்வேறு மட்டங்களில் மாணவர்களுக்கு பயிற்றப்பட்டு வருகின்றன.

கடந்த ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மகிந்தோதய திட்டத்தின் கீழ் Nenasala என்ற "உலக அறிவு கிராமத்திற்கு" என்ற கருபபொருளில் கணனிக் கல்வி நிலையங்களைப் பல்வேறு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஊடாக அறிமுகம் செய்து அவற்றை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பல திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தது. இது ஒரு முன்னேற்றகரமான நிகழ்வாகும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற வாக்கியம் எங்கள் யாவருக்கும் பொருத்தமுடையது. வட மாகாண மக்களுக்குப் பொருத்தமுடையது. நாம் யாவரும் ஒன்றுபட்டால் தான் எமக்குண்டு வாழ்வு. பல விதமான சமூகப் பிரிவினைகளுக்கும், கட்சிப் பிரிவினைகளுக்கும், பக்கச் சார்பான நடவடிக்கைகளுக்கும் காரணம் நாங்கள் கூடிக் கலந்து தீர்மானங்களை எடுக்காமையே. தான்தோன்றித்தனமாகத் தீர்மானங்களை எடுக்கின்றோம். அவற்றை மற்றவர்கள் ஏற்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். இன்னொருவரும் அவ்வாறே தீர்மானித்து எதிர்பார்க்கின்றார். இது முரண்பாடுகளை வளர்க்கின்றது.

இது சங்கங்களில் மட்டுமல்லாமல் கோவில்களிலும், நிறுவனங்களிலும் பலத்த முரண்பாடுகளை உண்டுபண்ணுகின்றது. இம் முரண்பாடுகள் எங்களைச் சந்திசிரிக்க வைக்கின்றன. நீதிமன்றங்களுக்குச் செல்ல வைக்கின்றன. அடிப்படையை ஆராய்ந்தோமானால் சுயநலமே இதற்குக் காரணம். ஓரிருவரின் சுயநலம் முழு சமுதாயத்தையே தலைகுனிய வைக்கின்றது. போட்டி இருக்க வேண்டும், ஆனால் பொறாமை இருக்கப்படாது.

எனவே அன்பார்ந்த இளைஞர்களே, யுவதிகளே, பெரியோர்களே வடபகுதி மக்கள் கற்றல் நடவடிக்கைகளில் மேம்பட்டவர்கள், பண்பாடுதெரிந்தவர்கள், ஏனையோரை மதிக்கின்ற தன்மை பொருந்தியவர்கள் எனப் பல்வேறு அடைமொழிகளால் வர்ணிக்கப்படும் போது நாம் அவற்றைப் புறக்கணித்துத் தவறான அல்லது பிழையான காரியங்களில் ஈடுபடக் கூடாது எம்முடைய நற்குணங்களுடன் சில சில தவறான குணங்களும் இருந்து வருவதை நாங்கள் மறுக்க முடியாது. அவற்றை மனத்தில் ஏற்றுப் பிழைகள் களைந்து உங்கள் எதிர்காலத்தை வளமானதாக மாற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என தெரிவித்தார். (செ-9)

## சர்வதேச யோ...



இதற்கான நிகழ்வு ஏற்பாடுகள் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

போருக்கு பின்னரான காலத்தில் குறிப்பாக வடமாகாணத்தில் இந்தியா பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக இந்திய வீட்டுத்திட்டம், புகையிரத பாதை புனரமைப்பு, பலாலி விமான நிலைய பாதை புனரமைப்பு காங்கேசன்துறை துறைமுகம் புனரமைப்பு மற்றும் யாழ் பல்கலைக்கழகத்துக்குரிய பீடங்கள் அமைத்தல் போன்ற அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

அந்த வகையில் துரையப்பா விளையாட்டு மைதானம் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இந்திய நாட்டின் நிதி உதவியினூடாக 146 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இப்பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை துரையப்பா விளையாட்டு மைதானத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இணைந்து திறந்து வைக்கவுள்ளனர். இந்திய பிரதமர் இந்த மைதானத்தை டெல்லியில் இருந்து காணொளி மூலம் அர்ப்பணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சென்ற வருடம் யூன் மாதம் 21 ஆம் திகதி முதன்முதலாக சர்வதேச யோகா தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இம்முறை அத்தினத்தை முன்னிட்டு துரையப்பா விளையாட்டு மைதானத்தை திறந்து வைக்கும் அதே நாளில் 2ஆவது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படவுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் உட்பட பலர் இணைந்து இந்த நிகழவில் கலந்து கொள்ளவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## இலங்கை மீதா...

தமது அடையாளம் வெளிப்படுத்தப்படாத பட்சத்தில் இலங்கை அரசாங்கத்தின் உள்ளக விசாரணையில் சாட்சியமளிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்கள் இடம்பெற வேண்டும் என்று ஆய்வில் கருத்து வெளியிட்ட அனைவரும் ஏகமனதாக வலியுறுத்தியுள்ளனர்.

இந்த ஆய்வில் கருத்துத் தெரிவித்த அனைவரும் இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் ஐரோப்பாவுக்குத் தப்பிச் சென்றவர்களாவர். இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 26 சதவீதமானோர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆய்வில் பங்கேற்ற 73 சதவீதமானோர் போர் முடிவுக்கு வந்த பின்னர் தாம் இலங்கை படையினரால் சித்திரவதை செய்யப்பட்டதாகவும், 54 சதவீதமானோர் தாம் பாலியல் வல்லுறவு அல்லது ஏனைய பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஐ.நா திடலில்...

வருமான பழ.நெடுமாறன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஐ.நா மனிதவுரிமை பேரவையின் 32 வது அமர்வு இன்றையதினம் ஆரம்பமாகி அடுத்த மாதம் 7-ம் திகதி நிறைவடைய உள்ளது.

32-வது அமர்வில் ஐநா மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல்ஹுசைன் இலங்கை தொடர்பாக இடை கால அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளார்.

அந்த வகையில் கடந்த வருடங்களில் இரு தடவைகள் ஐநா நோக்கிய எமது நீதிக்கான பயணங்களின் வரிசையில் இம்முறை ஆண்டின் நடுப்பகுதியிலும் காலத்தின் தேவை கருதி நாம் ஐநா நோக்கிய பயணத்தை முன்னெடுக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது தொடர்ச்சியான வெகுசன போராட்டத்தின் விளைவாகவே தமிழின அழிப்புக்கான பொறுப்புக் கூறல் சர்வதேசமயமாக்கபட்டு உயிர்ப்போடு உள்ளது.

அந்தவகையில் இம்முறையும் எதிர்வரும் 20-ம் திகதி திங்களன்று அன்று அனைத்துலக ரீதியாக புலம்பெயர் தமிழ் மக்கள் ஆகிய நாம் எழுக தமிழரே முழக்கத்துடன் ஐ.நா நோக்கி புறப்படுவோம். எமது மாவீரச் செல்வங்களின் ஈகத்தை எம் மனதில் நிறுத்தி, சிங்கள பேரினவாத அரசால் கோரமாக படுகொலை செய்யப்பட்ட எமது மக்களுக்கு பரிகார நீதியை வேண்டி, தமிழின அழிப்புக்கு பன்னாடு சுயாதீன விசாரணையை வலியுறுத்தி, ஓர்மத்தோடு பன்னாட்டு அரசியல் முற்சந்தியில் அலையென திரண்டிடுவோம் என தமிழின உணர்வாளர் பழ.நெடுமாறன் அழைப்பு விடுத்துள்ளார். (செ-12)

## காணொளிகள் மூல...

தாக்கல் செய்வதாக அந்த சபையின் தலைவர டாக்டர் சிசிர கோத்தாகொட குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் காணப்படும் குறைப்பாடுகளினூடாக குற்றவாளிகள் தண்டனை பெறுவதிலிருந்து தப்பித்துக்கு கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, சீசீரீவி காணொளிகளை அடிப்படையாக கொண்டு, போக்குவரத்து தொடர்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை மேலும் வலுப்படுத்துவதற்கான சட்டதிட்டங்களை கடுமையாக்குவது அவசியமானதொன்று எனவும் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோத்தாகொட தெரிவித்துள்ளார். (செ-12)

## உயிருக்கு போரா...

மீனவர்கள் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

மேலும், இவர்கள் வவுனியாவை சேர்ந்த ஒரே குடும்பத்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் ஏன வந்தார்கள் என்பது தொடர்பில், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளபட வேண்டும் என்று கடலோர பாதுகாப்பு கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார். (செ-12)

## அமெரிக்காவில்...

விக்கப்பட்டது.

ஆனால், இந்த கொடூர தாக்குதலில் 50 பேர் வரை உயிரிழந்துள்ளதாக ஆர்லந்தோ நகர தலைமை பொலிஸ் அதிகாரி ஜான் மின்னா கூறினார். மேலும் காயமடைந்த 53 பேர் மூன்று வெவ்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்,

இது ஒரு பயங்கரவாத தாக்குதலாக இருக்கக் கூடும் என்று ஆர்லந்தோ பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். மேலும் துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் மேலும் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் 50 பேர் உயிரிழந்த சம்பவம் அமெரிக்க மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (செ-12)

## இன்று ஆரம்ப...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சபையின் 32 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அரசாங்கம் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான குழுவினரும் ஜெனிவா நோக்கி பயணமாகவுள்ளனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதியே இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனிவா பயணமாகவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும 29 ஆம் திகதி உரையாற்றவுள்ளதுடன் உள்ளக விசாரணை பொறிமுறையின் தற்போதைய நிலைமை மற்றும் அதன் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கவுள்ளார்.

அத்துடன் இம்முறை ஜெனிவாக் கூட்டத் தொடரில் நல்லிணக்க செயலகத்தின் செயலாளர் மனோ தித்தவலவும் இலங்கையின் சார்பில் கலந்துகொள்ளவுள்ளார். மேலும் அரசாங்க உயர் அதிகாரிகள் மட்டக் குழுவும் இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் கலந்துகொள்ளவுள்ளது.

ஜூன் மாதம் 29 ஆம் திகதி இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனினால் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அந்த அறிக்கையில் நாட்டின் மனித உரிமை நிலைமை தொடர்பாக தான் மேற்கொண்ட மதிப்பீடு குறித்து விளக்கமளிக்கவுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை வந்திருந்த செய்ட் அல் ஹுசைன் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்த மதிப்பீட்டை செய்திருந்தார். அந்தவகையிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை குறித்த வாய்மூல அறிக்கை மிகவும் முக்கியத்துவமிக்கதாக அமையும் என கூறப்படுகின்றது.

இம்முறை ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை உள்ளக விசாரணை பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்குவதா இல்லையா என்ற விடயம் முக்கியம் இடம்பிடிக்கும் என கூறப்படுகின்றது.

எனினும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து முன்னெடுக்கப்படும் உள்ளக விசாரணையில் எக்காரணம் கொண்டும் வெ ளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படமாட்டார்கள் என்றும் உள்நாட்டு நீதிபதிகளை கொண்டே விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்திருந்தார்.

இதேவேளை சர்வதேச நீதிபதிகளை எக்காரணம் கொண்டும் உள்ளக விசாரணை பொறிமுறையில் இணைத்துக்கொள்ள மாட்டோம் என்றும் உள்ளக நீதிபதிகளைக் கொண்டு விசாரணை முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வலுவான முறையில் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்த இலங்கை அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு மங்கள சமரவீரவினால் ஜெனிவாவில் முன்வைக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் கலந்துகொள்ளவுள்ள பிரதிநிதிகள் மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். (செ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.